
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 ▸ 2023 அக்டோபர் 22 - அக்டோபர் 28 ▸ விலை: ரூ.15 ▸ 16 பக்கங்கள் ▸ இதழ் 29




# மோடியின் நண்பர் அதானியின் நிலக்கரி ஊழல்

## அம்பலப்படுத்துகிறது 'பைனான்சியல் டைம்ஸ்'

**இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியின் விலையை இரு மடங்கு அதிகமாகக் காட்டி அதானி நிறுவனம் மோசடி செய்துள்ளதாகவும், கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தங்கு தடையின்றி இந்த நிலக்கரி இறக்குமதி ஊழலை செய்து வருவதாகவும் 'பைனான்சியல் டைம்ஸ்' அம்பலப்படுத்தியுள்ளது.**



30 நிலக்கரி ஏற்றுமதி வர்த்தகத்தில் மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில், அதானி குழுமமானது, தைவான், துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள கடல் கடந்த போலி இடைத்தரகர்களைப் பயன்படுத்தி 5 பில்லியன் டாலர் (சுமார் 42 ஆயிரம் கோடி) மதிப்புள்ள நிலக்கரியை சந்தை விலையை விட இருமடங்கு விலையில் இறக்குமதி செய்துள்ளதாகவும், அனைத்து ஏற்றுமதி வர்த்தக சந்தர்ப்பங்களிலும், இறக்குமதி நிலக்கரியின் விலையை அதிகமாகக் காட்டி, அதானி நிறுவனம் தனிப்பட்ட ஆதாயம் அடைந்துள்ளதாகவும் 'பைனான்சியல் டைம்ஸ்' கண்டறிந்துள்ளது.

உதாரணமாக, இந்தோனேசியாவின் போலி நிறுவனங்களிலிருந்து வாங்கப்பட்ட நிலக்கரியின் விலை 139 லட்சம் டாலர்கள் (சுமார் ரூ. 1160 கோடி). இதனுடன் கப்பல் போக்குவரத்து மற்றும் காப்பீட்டுச் செலவுகளாக 3.1 லட்சம் டாலர்கள் (சுமார் ரூ. 25 கோடி) சேரும்போது, இதன் விலையை 142 லட்சம் டாலர்கள் (தற்போதைய மதிப்பில் ரூ. 1185 கோடி) என்று நிர்ணயிக்கலாம்.

ஆனால், நிலக்கரியை இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக வாங்கியது போலக் காட்டாமல், அதனை சீன தைபே, துபாய், சிங்கப்பூரிலுள்ள நிறுவனங்களிட மிருந்து வாங்கியது போல அதானி குழுமம் கணக்குக் காட்டியுள்ளது. அதாவது 139 லட்சம் டாலர் (தற்போ தைய மதிப்பில் ரூ. 1160 கோடி) மதிப்பிலான நிலக்கரியை 215 லட்சம் டாலராக காட்டியுள்ளது. சுமார் 73 லட்சம் டாலர் (சுமார் 609 கோடி ரூபாய்) கூடுதலாக காட்டப் பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 52 சதவிகிதம் அள விற்கு, அதானி கொள்ளை லாபம் அடைந்துள்ளார்.

கடந்த 2019 ஜனவரியில், இந்தோனேசியாவின் கிழக்கு கலிமந்தனில் உள்ள கலியோராங் துறை முகத்திலிருந்து 74 ஆயிரத்து 820 டன் அனல் நிலக்கரி, டிஎல் அகாசியா (DLAcacia) என்ற கொள் கலனில் இந்தியாவிற்கு வந்தது. இந்த நிலக்கரியின் மதிப்பு 1.9 லட்சம் டாலர் (சுமார் 159 கோடி ரூபாய்). இதற்கான கப்பல் போக்குவரத்து மற்றும் காப்பீட்டுச் செலவான 42 ஆயிரம் டாலரைச் சேர்த்தால், மொத்த மதிப்பு 2.3 லட்சம் டாலர் (சுமார் 192 கோடி ரூபாய்). ஆனால், இந்தியாவின் மிகப்பெரிய வணிகத் துறை முகமான குஜராத்தில் உள்ள முந்த்ராவுக்கு (இந்த துறைமுகமே அதானிக்குச் சொந்தமானதுதான்) வந்தபோது, அறிவிக்கப்பட்ட இறக்குமதி மதிப்பு 4.3 லட்சம் டாலர்கள் (சுமார் ரூ. 359 கோடி ரூபாய்). நிலக்கரி யின் மதிப்பு அப்படியே இரட்டிப்பாகக் காட்டப் பட்டுள்ளது.

நிலக்கரியின் விலை, அதன் தரம் மற்றும் எரிதிறன் மதிப்பைப் பொறுத்து பரவலாக மாறுபடும்.

2022 ஆகஸ்டில், 5,004 கிலோ கலோரிகள் என அறிவித்து, கலோரிஃபிக் (எரிதிறன்) மதிப்புடன் ஏற்றுமதி செய்யப்பட்ட ஹை லிங்கோஸ் (Hi Lingos) நிறுவனத்தின் ஒரு ஏற்றுமதியானது, டன் ஒன்றுக்கு 179 டாலர்கள் என்ற விலையைக் கொண்டிருந்தது.

இதன்படி பார்த்தாலும், அதற்கு "முந்தைய மூன்று மாதங்களில் ஆர்கஸ் 5000 (Argus 5000) கலோரி அளவுகோலின் அதிகபட்ச விலையே டன் ஒன்றுக்கு 145 டாலர்கள்தான்" (சுமார் 12 ஆயிரம் ரூபாய்) என்பதை பைனான்சியல் டைம்ஸ் சுட்டிக்காட்டுகிறது.

நிலக்கரி இறக்குமதியை இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக மேற்கொள்ளாமல், சீன தைபே, துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள கடல் கடந்த இடைத்தரகர் நிறுவனங்களை பயன்படுத்தி அதானி குழுமம் மேற்கொண்டதிலும் சட்ட விரோத ஊழல் புரிந்துள்ளது.

சீன தைபேயில் உள்ள முகவரியைக் கொண்டு இயங்கும் ஹை லிங்கோஸ், துபாயைத் தளமாகக் கொண்ட டாரஸ் என்ற நிறுவனம் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த பான் ஏசியா டிரேட்லிங்க் ஆகிய இந்த 3 நிறுவனங்களைத்தான் இந்தியாவிற்கு நிலக்கரியை இறக்குமதி செய்ய அதானி குழுமம் பயன்படுத்தியது.

இதில், சிங்கப்பூரைச் சேர்ந்த பான் ஏசியா டிரேட் லிங்க் நிறுவனம், அதானி குழுமத்தின் முன்னாள் ஊழியரால் நடத்தப்படும் நிறுவனம் ஆகும். அதாவது, தனது பினாமி நிறுவனத்தைப் பயன்படுத்தி, அதனிட மிருந்து நிலக்கரி கொள்முதல் செய்தது போல அதானி குழுமம் மோசடியாக கணக்கு காட்டியுள்ளது.

2021 செப்டம்பர் முதல், 2023 ஜூலைக்கு இடையே அதானி குழுமம் 73 லட்சம் டன் நிலக்கரியை இறக்கு மதி செய்துள்ளது. இதில், 42 லட்சம் டன்கள் மதிப்புள்ள இறக்குமதியை அதானி குழுமமே நேரடியாகச் செய்துள்ளது. இதில் ஒரு டன் நிலக்கரியின் விலை சராசரியாக 130 டாலர் (சுமார் 10 ஆயிரத்து 800 ரூபாய்) என கூறப்பட்டுள்ளது.

மீதமுள்ள 31 லட்சம் டன் நிலக்கரியை மூன்றுஇடைத்தரகர்நிறுவனங்களிடமிருந்து அதானி குழுமம் வாங்கி யுள்ளது. அவ்வாறு வாங்கப்பட்ட நிலக்கரியின் சராசரி விலை 155 டாலர் (சுமார் 11 ஆயிரத்து 260 ரூபாய்) என்று கூறியுள்ளது. இதன் ஒட்டுமொத்த வர்த்தகம் 800 லட்சம் டாலர் (சுமார் 660 கோடி ரூபாய்) சுமார் 20 சதவிகிதம் கூடுதல் விலையாகும்.

பான் ஏசியா டிரேட்லிங்க் நிறுவனம் தவிர்த்து அதானி குழுமம் தனக்கு இடைத்தரகராக பயன் படுத்திக் கொண்ட மற்ற இரண்டு நிறுவனங்கள், ஹை லிங்கோஸ் மற்றும் டாரஸ் ஆகியவை ஆகும்.

இதில், ஹை லிங்கோஸ் (Hi Lingos) நிறுவனம், ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியாவிலிருந்து 428 ஏற்றுமதிகள் மூலம் அதானி குழுமத்திற்கு 12.9 லட்சம் டன் நிலக்கரியை அளித்துள்ளது. இதற்காக, அதானி குழுமம் சுமார் 2 பில்லியன் டாலரை (இன்றைய மதிப்பில் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாயை) ஹை லிங்கோஸ் நிறுவனத்திற்குச் செலுத்தியுள்ளது.

இந்த ஹை லிங்கோஸ் நிறுவனம், வேறு யாருமல்ல, கவுதம் அதானியின் மூத்த சகோதரர் வினோத் அதானியின் நெருங்கிய கூட்டாளியும் தைவான் தொழி லதிபருமான சாங் சுங்லிங்கிற்குச் சொந்தமானது ஆகும். இதனை கடந்த ஆகஸ்ட் 31 அன்றைய அறிக்கை யிலேயே பைனான்சியல் டைம்ஸ் சுட்டிக்காட்டி யிருந்தது. இதன் மூலம் ஊழலில் ஊறித் திளைத்த அதானி குழுமம் இன்று நாறிக்கிடக்கிறது. வழக்கம் போல் பிரதமர் மவுனம் காக்கிறார்.







கட்சிக் கடிதம்

# அல்லவராயின் அவரை வீழ்த்தி ஆனந்தக் கூத்திடுவாள்



போர்க்குணம் மிக்க தோழர்களே!

நமது தோழர்களின் முகம் பார்த்து 15 நாட்களாகிவிட்டன. சுவாசக் குழல் மற்றும் நுரையீரலில் ஏற்பட்டிருந்த கிருமித் தொற்று கிட்டத்தட்ட முற்றாக நீக்கப்பட்டு விட்டது. பெற்றோர் சொல் கேட்கும் குழந்தையைப் போல மருத்துவர்களின் சொல் கேட்டு 15 நாட்கள் கழிந்தது புதிய அனுபவம் தான்! கட்டாயம் ஓய்வு தேவை என்கிறார்கள். எனினும் உங்களைச் சந்திக்க களத்திற்கு விரைவில் வந்து விடுவேன்.

நமது தோழர்களின் முகம் பார்த்து 15 நாட்களாகி விட்டன. சுவாசக்குழல் மற்றும் நுரையீரலில் ஏற்பட்டிருந்த கிருமித் தொற்று கிட்டத்தட்ட முற்றாக நீக்கப்பட்டு விட்டது. பெற்றோர் சொல் கேட்கும் குழந்தையைப் போல மருத்துவர்களின் சொல் கேட்டு 15 நாட்கள் கழிந்தது, புதிய அனுபவம் தான்! கட்டாயம் ஓய்வு தேவை என்கிறார்கள். எனினும் உங்களைச் சந்திக்க களத்திற்கு விரைவில் வந்து விடுவேன்.

மனித உடலுக்குள் என்ன நிகழ்கிறது என்பதை துல்லியமாக கண்டுபிடிக்க எத்தனை மருத்துவக் கருவிகள்! எங்கு தவறு நேருகிறது என்பதை கண்டுபிடித்து, அதனை உடனடியாக சரிப்படுத்தும் வல்லமை கொண்ட மருத்துவர்கள்! அதனை சரி செய்வதற்கு எத்தனை எத்தனை மருந்துகள்! மருத்துவ அறிவியல் உலகம் வெகுவாக முன்னேறி இருக்கிறது.

தன் உடல் நிலை எவ்வாறு இருக்கிறது என்று அவ்வப்போது பரிசோதித்து பார்த்துக் கொள்ள சிலரால் தான் முடிகிறது. மிக மிக அதிகமானவர்கள், இனி இயங்க முடியாது என்ற நிலை வரும் போது தான், மற்றவர்களால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். வருவாய் ஒரு பக்கம் குறைந்து கொண்டே செல்வதும், மறுபக்கம் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதுமாக உள்ள நிலையில், நமது நாட்டில் ஏழைகளுக்கு நேருகிற கதி அதுதான்.

இந்தியாவில் உற்பத்திப் பெருக்கம் நிகழ்ந்துவிட்டது; உலகத்தில் ஐந்தாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இருக்கிறது என்று மோடி அரசு பெருமை அடித்துக் கொள்கிறது. அதேநேரத்தில் கடும் பட்டினி நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா இருக்கிறது.

உருவான செல்வம் எல்லோருக்கும் சென்று சேரவில்லை. அடித்தட்டில் இருக்கும் மக்களின் உழைப்பை, உடைமைகளை உறிஞ்சித் தான் மேல் தட்டில் உள்ள 10% பேர் பெரும் பணக்காரர்களாகி இருக்கிறார்கள். பட்டினி மட்டுமல்ல ஊட்டச்சத்து குறைபாடும் இந்தியாவின் மிக முக்கிய கேடுகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்நிலையில், மருந்துகள், மருத்துவர்களின் தேவை முன்பை விட அதிகரிக்கிறது.



சோஷலிச நாடான சின்னஞ்சிறு கியூபாவில் 150 பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார். கொரோனா தொற்று போன்ற பேரிடர் சமயங்களில், அவர்கள் உலகமெங்கும் உள்ள மக்களுக்கு மருத்துவம் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் மீது பொருளாதார தடை விதித்து சீர்குலைத்த அரசுகளைக் கொண்ட நாட்டுமக்களையும் நேரில் சென்று காப்பாற்றினார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் புதிய மருத்துவ கல்லூரிகள் எதனையும் மாநில அரசோ, அல்லது தனியார் துறையோ உருவாக்கக் கூடாது என ஒன்றிய அரசு தடை விதித்திருக்கிறது. அதோடு மட்டுமில்லாமல் தற்போதுள்ள கல்லூரிகளிலும் 150 எம்பிபிஎஸ் இடங்களுக்கு மேல் உயர்த்தக் கூடாது என்றும் தடை.

10 லட்சம் மக்கள் தொகைக்கு 100 எம்பிபிஎஸ் இடங்கள் இருந்தால் போதுமாம். தமிழ்நாட்டில் 70 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் 10 ஆயிரம் இடங்கள் இருக்கின்றன தமிழ்நாட்டின் மக்கள் தொகை 8 கோடியை விட சற்று அதிகம்.

ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் இருந்தால் போதுமாம். ஆனால் தமிழ்நாட்டில் 600 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். தமிழ்நாட்டில் மக்கள் தொகை பெருக்க விகிதம் மற்ற மாநிலங்களை விடக் குறைவு.

தமிழ்நாட்டில் 1.8 லட்சம் பதிவு பெற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒன்றரை லட்சம் பேர் தொடர்ந்து மருத்துவ சேவையில் ஈடுபடுகிறார்கள்.

அதன்படி பார்த்தால் 600 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் இருந்து 10 ஆயிரம் மருத்துவர்கள் பயின்று தேர்ச்சி பெற்று வருகிறார்கள். இங்கு இடம் கிடைக்காத தமிழ்நாட்டு மாணவர்கள் வெளிநாட்டு மருத்துவக் கல்லூரியில் பயின்று, அவர்களும் ஆண்டுக்கு 1500 பேர் தமிழ்நாட்டுக்குள் வருகிறார்கள்.

குறைந்து கொண்டு செல்லும் மக்கள் தொகையையும் கணக்கெடுத்துப் பார்த்தால், இன்னும் பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 350 பேருக்கு ஒரு மருத்துவர் எனும் நிலை வரலாம்.

தமிழ்நாட்டில் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் என்ன? அவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் பணிபுரிய வேண்டும் என்று சட்டமா இருக்கிறது? இந்திய ராணுவம் உள்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், உலகமெங்கும் தமிழ்நாட்டில் பயின்ற மருத்துவர்கள் பணிபுரிந்து கொண்டு தானே இருக்கிறார்கள்?

இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்து மருத்துவ சேவை பெறுவதற்காக தமிழ்நாட்டுக்கு வரும் மக்களின் தொகையும் கொஞ்சம் அல்ல. மிகுந்த நம்பிக்கையோடு வருகிறார்கள். அதேபோல் குணமடைந்து ஊர் திரும்புகிறார்கள்.

தமிழ்நாட்டில் பயிலும் மருத்துவர்களின் எண்ணிக்கையை தமிழ்நாட்டு மக்கள் தொகையோடு சேர்த்து கணக்கிடுவது மடமையல்லவா?

இந்தியா முழுவதும் மருத்துவர்கள் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டு தான் இருக்கிறது. இப்போது 88 லட்சத்து 40 ஆயிரத்து 130 மருத்துவர்கள் உள்ளார்களாம். அதை சரியெனக் கொண்டாலும் 1800 பேருக்கு ஒரு மருத்துவர்தான் இருக்கிறார்.

சோசலிச நாடான சின்னஞ்சிறு கியூபாவில் 150 பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார். கொரோனா தொற்று போன்ற பேரிடர் காலங்களில், அவர்கள் உலகமெங்கும் உள்ள மக்களுக்கு மருத்துவம் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் மீது பொருளாதாரத் தடை விதித்து சீர்குலைத்த அரசுகளைக் கொண்ட நாட்டு மக்களையும் நேரில் சென்று காப்பாற்றினார்கள்.

மேல்நிலைப்பள்ளி கல்வியை முடித்து கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் தற்போது 26.3 சதமாக உள்ளது. இதனை 2035க்குள் 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயித்திருக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் அதையும் தாண்டி இப்போதே 52 சதவீதம் பேர் கல்லூரி படிப்புக்கு செல்கிறார்கள். உடனே தமிழ்நாட்டில் புதிய பள்ளிகளை கல்லூரிகளை திறக்க கூடாது, இருப்பதிலும் சிலவற்றை மூடிவிட வேண்டும் என்று ஒன்றிய அரசு உத்தரவிடுமா என்ன?

தமிழ்நாடு முன்னேறுவதில், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிப்பதில் ஒன்றிய அரசுக்கு ஏன் இவ்வளவு கோபம்? அதைத் தடுக்க எத்தனை முயற்சிகள்?

காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ளும் முறைகள் குறித்து உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கர்நாடகா அரசு செல்கிறது. மழை அதிகம் பெய்து வெள்ளப் பெருக்கெடுத்தால் கர்நாடக அரசு அணைகளை திறந்துதான் விட வேண்டும். வேறு என்ன வழி அதற்கு? பற்றாக்குறை உள்ள காலத்தில் எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதுதான் இங்குள்ள பிரச்சனை.

ஒன்றிய அரசு வலியுறுத்தி இருந்தால் தமிழ்நாட்டுக்கு உரிய அளவு தண்ணீர் கிடைத்திருக்கும். காவிரிப் படுகையில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நடவு செய்யப்பட்டு இருந்த நெற்பயிர்கள் பிழைத்திருக்கும்.

தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதுவரை ஒருமனதான தீர்மானங்களே நிறைவேறி வந்திருக்கின்றன. அந்தத் தீர்மானங்களை எதிர்க்கிற மாபாதகச் செயலை ஒரு கட்சியும் இதுவரை செய்ததில்லை.

ஆனால் இம்முறை எந்த அரசியல் கலப்புமின்றி, நேர்மையாக வடிக்கப்பட்ட, நியாயமான தீர்மானத்தை எதிர்க்கும் படுபாதகத்தை பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு ஏதோ சொத்தைக் காரணங்களைச் சொல்கிறார்கள். சொந்த மாநிலத்தின் நலன்களையே காவு கொடுக்கும் ஒரு கட்சி இங்கு தேவைதானா என்பதை தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

பாலஸ்தீனத்தை இஸ்ரேல் நொறுக்குவது போல, ஏன் தமிழ்நாட்டின் உரிமை சிதைக்கப்பட வேண்டும்? அவையாவது வெவ்வேறு நாடுகள். ஆனால் இந்தியா ஒரே நாடு தானே?

பாரதி பாடினான்:

“நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய்.
அவர் அல்லவராயின் அவரை விழுங்கிப்
பின் ஆனந்தக் கூத்திடுவாள்’

மீண்டும் சந்திப்போம்!

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## யார் ப.மாணிக்கம்?

எதற்கும் துவளாத நெஞ்சுக்கு சொந்தக்காரரின்
பெயரே ப.மாணிக்கம்
புண்படா சொல்லில் புலமை வாய்ந்தவர்
பெயரே ப.மாணிக்கம்
பக்குவப்பட்ட பண்பாளரின் பெயர்தான்
ப.மாணிக்கம்
ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும்
அநீதிக்கு எதிராக முதல் போர்குரல்
எழுப்புபவர் பெயரே ப.மாணிக்கம்.
தியாக தலைவர்களில் சிறந்த தலைவர்
ஒருவரே தோழர் ப.மாணிக்கம்

– பா.சதீஷ்குமார்
(ப.மாணிக்கத்தின் பேரன்)

ப.மாணிக்கம் பிறந்த நாள்: 26.10.1922

# வரலாற்றுப் பதிவுகளின் களஞ்சியம் வி.ராதாகிருஷ்ணன்



டி.எம்.மூர்த்தி

விடுதலைப் போராட்ட கால தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் இணைப்பாக நின்று கொண்டிருந்த வெகு சில பாலங்களில் இன்னொன்று விழுந்து விட்டது.

இளம் வயதில் நான் முழு நேர ஊழியனாக நுழைந்த போது, மூத்த தோழர்கள் 1940 – 50 களின் வீரதீர செயல்பாடுகளை உணர்வு வேகத்தோடு பகிர்ந்து கொள்வார்கள். கம்யூனிஸ்டுகளும் செங்கொடிச் சங்கத்தினரும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி இருந்த காலம்.

“ஆத்துக்குள்ள மைய மண்டபத்துல பி.சி. ஜோஷி வந்து பேசினாரு பாரு! கொடிய மடக்கிப்பிடி, அடிச்சா திருப்பி அடின்னாரு. அடுத்த நாள் மதுரையே மாறிப் போச்சுல!” என்பார்கள்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் தலைவரும் ‘டெய்லி ஒர்க்கர்’ ஆங்கில இதழின் ஆசிரியராய் இருந்தவருமான ரஜினி பாமி தத் தொடங்கி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்கள் பி.சி.ஜோஷி, அஜாய் கோஷ், சி.ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ.டாங்கே, எஸ்.எஸ். மிராஜ்கர் ஆகியோர் பேசியதை எல்லாம் நினைவு கூர்வார்கள். இவர்களெல்லாம் ஆங்கிலத்தில் பேசியவர்கள் தானே! எப்படி வரிமாறாமல் சொல்கிறார்கள் என்று வியப்பாக இருக்கும்.

அவர்கள் வேறு மொழியில் பேசினார்கள் என்றாலும், இவர்கள் காதுகளில் தமிழ்ச் சொற்களாக மாறி விழுந்ததற்கு காரணம் தோழர் வி.ராதாகிருஷ்ணன்.

‘சோட்டா ராதா’ என்று தான் அன்போடு சொல்வார்கள். 20, 30 ஆண்டுகளுக்குப் பின்பும், கலைந்து விடாமல் நெஞ்சில் பதிந்து கிடக்கிறது என்றால் அந்த பேச்சும் , மொழி பெயர்ப்பும் எத்தகைய வல்லமை கொண்டவையாக இருந்திருக்க வேண்டும்!

1995ல் அவரை நேரில் பார்த்த போது தான் அவரது செல்லப் பெயர் எவ்வளவு பொருத்தமானது என்று புரிந்தது. மெல்லிய உருவம். மெலிதான குரல். இது எப்படி அந்த அக்கினியை கக்கிற்று என்பதுதான் புரியவில்லை! மெல்லிய அமைதி தவழும் பழக்கவழக்கம், ஆனால் மாறாத போர்க்குணம்.

13.06.1922ல், கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் பிறந்தவர் தோழர் ராதா. தோழர் பாலன் பிறந்ததும் பொள்ளாச்சியில்தான். “எனக்கு நினைவு தெரிந்த நாளில் நம் நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு கிடக்கிறது சுதந்திர நாடு அல்ல என்று அறிந்தேன்” என்கிறார் அவர். சிறுவயதிலேயே கதர்க்கடைக்கு சென்று தன்னை காங்கிரஸ் உறுப்பினராக இரண்டு அணா கொடுத்து பதிவு செய்து கொண்டது மட்டுமல்லாமல், ஏழணா கொடுத்து நான்கு முழு கதர் வேட்டி வாங்கிக் கட்டிக் கொண்டு, “நானும் ஒரு காங்கிரஸ்காரன். நாட்டின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்திருக்கிறேன்” என்று பெருமைப்பட்டுக் கொண்டதாக தன் வரலாற்று நூலில் அவர் கூறியிருக்கிறார்.

பதினொன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது வகுப்பறையில் “வந்தே மாதரம் அல்லாஹு அக்பர், பிரிட்டிஷ் ஆட்சி ஒழிக! சுதந்திரம் அடைந்தே தீருவோம்! தேச பக்தர்களே திரண்டு எழுங்கள்!” என்ற முழக்கங்களை சுண்ணாம்பு கட்டியில் எழுதியுள்ளார்.

1939இல் இரண்டாம் உலகப் போர் உருவான சமயத்தில் தீவிர பாலர் சங்கத்தை தொடங்கியவர். அப்போதே பொள்ளாச்சியில் சாக்கு தையல் தொழிலாளர் சங்கத்தையும் உருவாக்கி தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைப்பதற்கான போராட்டங்கள் நடத்தியவர்.

இதனால் காவல் துறையின் கண்களில் அவர் விழுந்தார். 1941ல் என்.சி. சேகர், கே.என். சின்னையன், சீலம்பால், பி.என். ராமலிங்கம், கருப்பண்ணன் உள்ளிட்ட 11 தோழர்கள் மீது கோவை கம்யூனிஸ்ட் சதி வழக்கு போடப்பட்டது. அவர்களுக்கு எதிராக சாட்சி சொல்வதற்காக ராதாவை கூண்டில் ஏற்றியது காவல்துறை. எந்தக் கேள்விக்கும் தெரியாது என்று அவர் பதில் சொன்னார்.

திரும்பும் போது சிஐடி இன்ஸ்பெக்டரும், ராதாவின் உறவினர்களும் அவரைக் கடிந்து கொண்டார்கள். இனிமேலும் தாமதிக்கக் கூடாது என்று தோழர் பி.கே. ராமசாமி மறைவிடத்திற்கு சென்று தலைமறைவு வாழ்க்கையை துவக்கினார். அப்போது அவருக்கு வயது வெறும் 19 தான். தலை மறைவு பணியின் போது தோழர் பி.இராமமூர்த்தியை சந்திக்க நேர்ந்தது. தலைமறைவு முடிந்ததும் ஜனசக்திக்கு பணியாற்ற சென்னைக்கு வா என்று அழைப்பு விடுத்தார்.

1942ல் கைது செய்யப்பட்டு பொள்ளாச்சி துணைச் சிறையில் இரண்டு மாதங்கள் வைக்கப்பட்டிருந்தார். விடுதலை செய்யப்பட்ட உடனேயே, தோழர் பி. ஆர். முன்பு சொன்னதை உத்தரவாகக் கருதி, தோழர்கள் ஆர்.கே. கண்ணன், உமாநாத் ஆகியோரிடமிருந்து அறிமுகக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு ஜனசக்தியில் சேர சென்னைக்கு ரயிலேறினார் ராதா. மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் ஜனசக்தி அவரை வரவேற்று, அரவணைத்துக் கொண்டது. அப்போது அவருக்கு 20 வயது. தோழர் ஜீவாவுக்கு பக்கத்தில் அமர்ந்து வேலை செய்ய நேர்ந்ததையே பெரும் பேறாகக் கடைசிவரை சொல்லி பெருமிதப்படுவார்.

அந்த சமயங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலகம் கம்யூன் என்ற கூட்டமைப்பாக செயல்பட்டது. இளைஞர்கள் பலர் விடுதலைப் போராட்ட ஆர்வத்தோடு கல்லூரி படிப்புகளை தொடர்ந்து கட்சியின் முழு நேர ஊழியர்களாக சேர்ந்து செயலாற்றி வந்தார்கள். ராதாகிருஷ்ணன் என்ற பெயரில் சிலர் இருந்தார்கள். புகழ்பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் தாய்மாமன் பெயரும் ராதாகிருஷ்ணன்தான். அவர் உருவத்தை ஒட்டி அவரை தடிராதா என்பார்கள். இந்த ராதா மெலிவாக இருப்பதால் ‘சோட்டா ராதா’ ஆனார்.

1949ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் தடை செய்யப்பட்டது. சென்னை அலுவலகத்தில் இருக்கும்போதே தோழர் ராதா கைது செய்யப்பட்டார். வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக இருந்தார். உண்ணாவிரதத்திலும் கலந்து கொண்டார்.

1942ல் இருந்து 1967ல் அவர் ‘சோவியத் நாடு’ பத்திரிகை பணிக்கு கட்சி வழி அனுப்பி வைக்கும் வரை 23 ஆண்டுகள் தொடர்ச்சியாக அவர் ஜனசக்தியில் பணிபுரிந்து இருக்கிறார். 1991 வரை அவர் ‘சோவியத் நாடு’ பத்திரிகை அலுவலகத்தில், குறிப்பாக சோவியத் பலகணி இதழ் தயாரிப்பில் பணி புரிந்து வந்தார். பிராட்வேயிலிருந்து தியாகராய நகர் பாலன் இல்லத்திற்கு அலுவலகம் மாற்றப்பட்ட போது மீண்டும் ஜனசக்தியில் இணைந்தார். அப்போது ஊதியம் வாங்க மறுத்துவிட்டார். போக்குவரத்துக்கான சிறிய தொகை கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டது.

அவர் அம்பத்தூரில் இருந்து பேருந்துகள் மாறி செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது 88ஆவது வயதில், 2010ம் ஆண்டு மார்ச் 9ல்,



ஜனசக்தி அலுவலகம் கிண்டிக்கு மாற்றப்பட்டது. அந்த அலுவலகத்திற்கு வந்தார். அலுவலகத்தில் இருந்து கீழே இறங்கிய போது அவர் நிலைதடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது. அதற்குப் பின்னும், பல ஆண்டுகள் ஜனசக்திக்கு கட்டுரைகளையும் முக்கியமான ஆங்கில கட்டுரைகளின் மொழியாக்கத்தையும் அனுப்பி வைத்துக் கொண்டே இருந்தார்.

பல ஆங்கில நூல்களைத் தமிழுக்கு மொழியாக்கம் செய்துள்ளார். ரோசலிண்ட் மைல்ஸ் எழுதிய “வோர்ல்ட் ஹிஸ்டரி ஆஃப் வுமென்ஸ் மூவ்மெண்ட்” என்ற நூலை ‘உலக வரலாற்றில் பெண்கள்’ என்னும் அற்புதமான நூலை சிறந்த முறையில் தமிழாக்கம் செய்தவர்.

1954 முற்பகுதியில் குடியாத்தம் சட்டப்பேரவை தொகுதியில் காமராஜர் போட்டியிட்டபோது கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக வி.கே. கோதண்டராமன் நிறுத்தப்பட்டு இருந்தார் அப்போது பரப்புரைக்காக பாப்பாஉமாநாத்துடன் வந்த தோழர் மோட்சமேரியுடன் அவருக்கு அறிமுகம் ஏற்பட்டது. அவரது தந்தை அந்தோணிசாமி ரயில்வே தொழிலாளி ஆவார். அவரை திருமணம் செய்து கொண்ட பின்பு தம்பதிகள் இருவரும் சேர்ந்து கட்சி பணிகளில் ஈடுபட்டார்கள்.

விடுதலைப் போராட்டத்திலும், அதன் பிறகு உழைக்கும் மக்களின் உரிமைகளை காப்பதற்கான போராட்டங்களிலும், கம்யூனிஸ்ட் ஊடகத்திலும் அயராது பங்கேற்ற அருமைத் தோழர் வி. ஆர்.

அவருக்கு நூறாவது வயது தொடங்கிய போது, கொரோனா காரணமாக அவரை அருகில் சென்று வணங்க முடியவில்லை. ஆனால் நூற்றாண்டு நிறையும்போது அவரை கௌரவித்து வணங்கும் வாய்ப்பை காலம் நமக்கு தந்தது.

அவரது வாழ்வினர் மோட்சமேரி முன்பே காலமாகிவிட்டார். அந்த தம்பதிக்கு கீதா, டாக்டர் சாந்தி, பாரதி என மூன்று மகள்கள். அவர் மீது பேரன்பும் அவரது பணியின் மீது பெருமையும் கொண்ட பாசக் குடும்பம் அது.

வரலாற்று பதிவுகளின் களஞ்சியமாக திகழ்ந்த விடுதலை போராட்ட வீரர், நூற்றி இரண்டு வயது ஆன முதுபெரும் தோழர் வி.ராதாகிருஷ்ணன் நம்மிடம் இருந்து நிரந்தரமாக விடை பெற்று விட்டார்.

அவர் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் நன்றி கூறி, செங்கொடி போர்த்தி, செவ்வணக்க முழக்கமிட்டு, வழியனுப்பி வைப்போம்.

## ஐந்து மாநில தேர்தலில் பாஜகவை தோற்கடிப்பீர்!

### ◆ தொழிற்சங்க, விவசாய சங்க கூட்டமைப்பு வேண்டுகோள்

மத்திய தொழிற்சங்கங்கள், துறைசார்ந்த கூட்டமைப்புகள், சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆகியவற்றின் கூட்டம் 13 10 2023 அன்று நடைபெற்றது.

லக்கிம்பூர் கேரி நினைவு தினமான அக்டோபர் மூன்றாம் தேதி, தொழிற்சங்க, விவசாயிகள் சங்க அழைப்பை ஏற்று இந்தியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதை கூட்டம் பரிசீலித்து, போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டது.

26, 27, 28 நவம்பர், 2023 அன்று ஆளுநர் மாளிகைகள் முன்பாக பெருந்திரள் அமர்வு போராட்டம் அனைத்து மாநிலங்களிலும் நடைபெற இருக்கிறது. அதை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான ஆயத்த பணிகளை கூட்டம் ஆய்வு செய்தது.

இந்த இயக்கத்தை மக்களிடம் அடிமட்டம் வரை கொண்டு செல்லும் வகையில் சுவரொட்டிகள் தயாரித்து ஒட்டுதல், பயண பரப்புரைகள் மேற்கொள்ளுதல், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துதல், சிறு நூல்கள், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். ஒன்றிய அரசாங்கம் நாட்டின் இறையாண்மையை, சுயசார்பை அபாயத்திற்கு உள்ளாக்கும் வகையில் கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமான கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்கிறது. இது தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பெரும் தீங்கை விளைவிக்கும்.

விவசாயிகள், தொழிலாளர்கள் சங்கங்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, மின்சாரத் திருத்த மசோதா 2022 ஐ அறிமுகப்படுத்துவதில் அரசாங்கம் முனைப்பாக உள்ளது. 41 ராணுவ ஆயுதத் தொழிற்சாலைகள் 7 நிறுவனங்களாக மாற்றப்பட்டன. இப்போது மறுபடியும் மூன்றாக இணைக்க முயற்சிக்கிறார்கள். கார்ப்பரேட்டுகளின் இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்கக் கூடிய இந்த முறை வன்மையாக கண்டிக்கத்தக்கது. நிலக்கரித் தொழிலில் இரு தரப்பினரும் பேசி சம்பளம் நிர்ணயத்திற்கு உடன்பாடு காணும் வழிமுறை தாக்குதலுக்கு உள்ளாகி ருக்கிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட ஊதியங்களை வழங்குவதைக் கூட நிறுத்த முயல்வதை தொழிற்சங்கங்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்துள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்யவும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறவும் இயக்கம் கட்டமைக்கப்படுவது குறித்து கூட்டம் விவாதித்தது. இதேபோல், 2014 முதல் ஓய்வூதியமாக ரூ.1000/மட்டும் செலுத்தி வரும் 70 லட்சம் இபிஎஸ்95 ஓய்வூதியதாரர்கள், தொகையை உயர்த்தக் கோருகின்றனர்.

ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, சத்தீஸ்கர், மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடக்க இருப்பதை கூட்டம் கவனத்தில் கொண்டது. மத்தியப் பிரதேசம் மற்றும் மிசோரமில் இருந்து பா.ஜ.க.வின் கார்ப்பரேட் சார்பு கூட்டணியை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவதுடன், மற்ற மூன்று மாநிலங்களில் அவர்கள் தேர்தெடுக்கப்படாமல் தவிர்க்குமாறும் மக்களை கேட்டுக் கொண்டு நேரடி பரப்புரையில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்
ஜனசக்தி
மலர் 86 இதழ் 29

## அடுத்த அடி சிஏஜிக்கு!

இந்தியாவின் தலைமை கணக்கு தணிக்கையாளராக இருப்பவர் கிரிஷ் சந்திர முர்மு. பிரதமர் மோடிக்கு மிக விசுவாசமானவர். ஒரிசாவில் பழங்குடி இனத்தில் பிறந்தவர். ஆனால் குஜராத் பாட்ச் ஐஏஎஸ் அதிகாரி. அங்கு பல்வேறு பதவிகளை வகித்த அவர், குஜராத்தில் மோடி முதலமைச்சராக இருந்தபோது அவரது முதன்மைச் செயலாளராக பணி புரிந்தார்.

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் தொடர்பான ஈவிரக்கமற்ற கொலை வெறியாட்டத்தின் போது அதில் மோடி அரசை பாதுகாக்க அவர் என்னென்ன செய்தார் என்பது பிரசித்தம். அதிகாரிகளை அவர் மிரட்டுவது காணொளி காட்சிகளாகவே வந்தன.

இந்தக் கொடூர வெறியாட்டத்தை பற்றி விசாரித்த நானாவதி கமிஷன் முன்பு, அந்த மாநிலத்தின் முன்னாள் டிஜிபி ஆஜராகி வாக்கு மூலமே கொடுத்தார். மோடிக்கு சாதகமாக அறிக்கையை எப்படி எழுத வேண்டும் எனச் சொன்னதோடு, அதைச் செய்யாவிட்டால் என்ன நிகழும் என என்னை மிரட்டினார், வற்புறுத்தினார், மேலும் மேலும் அழுத்தம் தந்தார் என்று அவர் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் லெப்டினன்ட் கவர்னராக இருந்த முர்மு சிஏஜியாக 2020இல் நியமனம் செய்யப்பட்டார்.

இந்தியாவின் வரவு செலவு கணக்குகள் சரியானதாகவும் ஒளிவு மறைவு இல்லாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கு உருவாக்கப்பட்ட பொறுப்பு தான் தலைமை கணக்கு தணிக்கையாளர் (சிஏஜி) அலுவலகம்.

ஒவ்வொரு கணக்காண்டிலும், அரசின் செயல் திறன் அறிக்கையை (பெர்பார்மன்ஸ் ரிப்போர்ட்) சிஏஜி முன் வைக்கும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில், 2ஜி, நிலக்கரி ஏலம், காமன்வெல்த் விளையாட்டு போட்டி ஆகியவற்றில் நேர்ந்த பொருளாதார முறைகேடுகளை முன்வைத்தது இதே சிஏஜி தான். ஊழல் அரசு என மோடி பரப்புரை செய்ய இந்த அறிக்கைகள் தான் பயன்படுத்தப்பட்டன

மோடி பதவியேற்றபின் சிஏஜி அறிக்கைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துவிட்டது. 2014ல் 55 அறிக்கைகளை சிஏஜி முன் வைத்தது. படிப்படியாக குறைந்து சென்ற ஆண்டு வெறும் 14 அறிக்கை, இந்த ஆண்டு 12 அறிக்கைகள் மட்டுமே.

தத்தா பிரசாத் சூரியகாந்த் ஷிர்சாத் என்ற அதிகாரி, ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா ஆகியவற்றை பற்றி புலனாய்வு செய்தார். அவர் 28 மாநிலங்களில், 161 மாவட்டங்களில் உள்ள 964 மருத்துவமனைகளை ஆய்வு செய்தார். 2.25 லட்சம் பேருக்கு, அவர்கள் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதாக கணக்கு எழுதப்பட்டதை கண்டறிந்தார். 300 கோடி ரூபாய் மருத்துவச் செலவு எடுக்கப்பட்டுள்ளது. 1.57 லட்சம் பேர் பயனாளிகளாக காட்டப்பட்டது பொய் கணக்கு என்பதை எல்லாம் தணிக்கை செய்து அறிக்கை வைத்தார்.

அதுர்வா சின்ஹா என மற்றொரு அதிகாரி. அவர்தான் விரைவு நெடுஞ்சாலைகள் போடுவதற்கு ஒரு கி.மீட்டருக்கு 18.2 கோடி என அமைச்சரவை முடிவு செய்து இருந்தும், துவாரகா எக்ஸ்பிரஸ்வே நெடுஞ்சாலையில் ஒரு கிலோமீட்டருக்கு 250.77 கோடி செலவழிக்கப்பட்டிருப்பதை கண்டறிந்து அறிக்கை தந்தவர்.

இந்த அறிக்கைகள் ஆகஸ்ட் 11ஆம் தேதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன. அறிக்கைகளை தாக்கல் செய்த அதிகாரிகள் செப்டம்பர் 22ஆம் தேதி பணி மாற்றம் செய்யப்பட்டனர்.

ஷிர்சாத் அதே அலுவலகத்தில் ஆய்வு பிரிவிலிருந்து மாற்றி சட்ட பிரிவுக்கும், அதுர்வா கேரளாவுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் அனைத்து விதமான கள ஆய்வுகளையும் நிறுத்துமாறு, வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. சிஜஜி அலுவலர்களில் 30 முதல் 40 சதவீதம் பேர் கள ஆய்வுகளையே பணியாகக் கொண்டவர்கள். இது வாய்மொழி உத்தரவாக மட்டுமே இருப்பதால் நாளை அவர்கள் பணியை செய்யவில்லை என்று சொல்லி கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம். கள ஆய்வுகள் இல்லாமல் துல்லியமான ஆய்வு அறிக்கைகள் தயாரிக்க முடியாது.

அதோடு மட்டுமல்லாமல் மட்டுமல்லாமல் சிஏஜியான முர்மு எந்த அறிக்கையிலும் கையெழுத்திடுவதில்லை என்று தெரிகிறது அவரது கையெழுத்து இல்லாமல் எந்த அறிக்கையும் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட முடியாது..

இவையெல்லாம் உண்மையல்ல என்று சிஏஜி மறுக்கிறதுதான். ஆனால் ஊடகத்துறையிலிருந்து, எழுத்தாளர்கள், நீதிபதிகள் வரை உடன்படுபவர்கள் உயர்த்தப்படுகிறார்கள்; உண்மைகளை முன்வைப்பவர்கள் ஒழிக்கப்படுகிறார்கள் என்பதை நாடு கண்ணெதிரே கண்டு கொண்டிருக்கிறது.

# முதுநிலை மருத்துவ மாணவி தற்கொலை! விசாரணைக்குழு அமைக்க வேண்டும்


ஜி.ஆர்.இரவீந்திரநாத்

“கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் ஸ்ரீமூகாம்பிகை மருத்துவக் கல்லூரியில், முதலாம் ஆண்டு முதுநிலை மருத்துவம் படித்து வந்த டாக்டர் சுகிர்தா, தற்கொலை செய்து கொண்டது அதிர்ச்சியளிக்கிறது. ஸ்ரீமூகாம்பிகை மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து நடந்துவருவதாகக் கூறப்படுகிறது. கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாகவும், சிறிய பிரச்சினைகளுக்குக்கூட பெருந்தொகை அபராதமாக வசூலிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அனைத்து மாணவர்களும் கட்டாயமாக விடுதியிலேயே தங்க வேண்டும் என்றும், சைக்கிள், கார், பைக், செல்ஃபோன் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் மிரட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட்டதில்லை என்றும், மாணவர்களை கொத்தடிமை போல் நடத்துவதாகவும் கூறப்படுகிறது.

இவை குறித்து விசாரணை நடத்த குழு ஒன்றை தமிழ்நாடு அரசு உடனடியாக அமைக்க வேண்டும். அந்த விசாரணைக் குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

மூகாம்பிகை போன்று மற்ற தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும், நிகர்நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களிலும் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக புகார்கள் தொடர்ந்து வருகின்றன. இதனால் அங்கு பயிலும் மருத்துவ மாணவர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

எனவே, அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும், நிகர்நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களிலும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் மருத்துவக் கல்லூரிகளிலும் நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பாக நிபுணர் குழுக்களை அமைத்து, மனித உரிமை மீறல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து களைவதற்கான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.






◆ பல்வேறு வன்முறைகளுக்கு அடிப்படையாக உள்ள பணிச்சுமையை குறைக்கவும், உழைப்புச் சுரண்டலை தடுக்கவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

◆ இப் பணிச் சுமையே முதுநிலை மருத்துவ மாணவர்களிடம், ராகிங் போன்ற குற்றங்கள், வன்முறைகள் நடக்க அடிப்படைக் காரணமாக உள்ளது.

இதை சரிசெய்ய, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை நியமிக்க வேண்டும்.

பயிற்சி மருத்துவர்களுக்கும், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் தொடர்ச்சியாக 8 மணி நேரத்திற்கு மேல் பணி வழங்கக் கூடாது. இது தொடர்பாக, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தொடுத்த பொதுநல வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பயிற்சி மருத்துவர்களுக்கும், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும், அவர்களுக்குத் தொடர்பில்லாத, அவர்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லாத வேலைகளை வழங்கக் கூடாது. தேசிய மருத்துவக் கவுன்சில் (NMC) விதிமுறைகளுக்குப் புறம்பான, அதில் குறிப்பிடப்படாத வேலைகளை வழங்கிடக் கூடாது.

போதிய அளவு ஓய்வும், உறக்கமும் கிடைப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அவர்களுக்கு உரிய நேரத்தில் சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மன அழுத்தத்தை குறைக்கும் வகையில், ஆரோக்கியமான பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இத்தகைய வசதிகளை செய்து கொடுக்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

◆ மருத்துவ மாணவர்கள் நலன் காக்க மாநில மற்றும் கல்லூரி அளவில் “மருத்துவ மாணவர் நல வாரியங்கள்” அமைத்திட வேண்டும்.

◆ மருத்துவ மாணவர்கள் மீதான அனைத்துவிதமான வன்முறைகளையும், அடக்குமுறைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

◆ மருத்துவ மாணவர்களை, தொடர்ந்து கொடுமைகளுக்கு உள்ளாக்கும், கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் தனியார் மருத்துவக் கல்லூரிகளை, எந்த இழப்பீடுமின்றி அரசே ஏற்றிடும் வகையில் சட்டம் கொண்டுவர வேண்டும்.

◆ மருத்துவக் கல்லூரிகளில் நிலவும் பாலியல் வன்முறைகளை தடுத்திட, அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் “விஷாகா” குழுக்களை அமைத்து முறையாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

◆ அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் ராகிங் தடுப்பு குழுக்கள் முறையாக செயல்படுகின்றனவா என்பதை கண்காணிக்க வேண்டும்.

◆ ராகிங், ஈவ் டீசிங் மற்றும் பாலியல் வன்கொடுமைகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும்.

◆ ஆணாதிக்க மனநிலைக்கு எதிராகவும், பெண்களின் உரிமைகள் குறித்தும், பாலின சமத்துவம் குறித்தும், பெண்களிடம் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடந்துகொள்வது குறித்த விழிப்புணர்வை சிறுவயது முதலே ஏற்படுத்த வேண்டும்.

◆ புதிய, ‘முற்போக்கான, மனிதநேய முறையிலான கூட்டு உழைப்புப் பண்பாட்டை (Work Culture) மருத்துவத் துறையில் வளர்த்தெடுக்க வேண்டும்.

இன்றைய சமூகப் பொருளாதார அமைப்பு, உழைக்கும் மக்களிடையேயும் கூட சமத்துவ, சகோதரத்துவ உணர்வை மழுங்கடிக்கச் செய்து விடுகிறது.

இத்தகையப் போக்கு, மேலாதிக்க மனோபாவத்தையும், மற்றவர்களை தன்னைவிட கீழானவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் கருதும் மனநிலையையும் உருவாக்குகிறது.

இத்தகைய உணர்வு, முதுநிலை முதலாம் ஆண்டு மருத்துவப் படிப்பில் சேரும் மாணவர்களை, தன்னைவிட கீழானவர்களாக கருதும் மனநிலையை சீனியர் மருத்துவ மாணவர்களிடம் உருவாக்குகிறது. இந்த மனநிலையுடன், சீனியர் மாணவர்களுக்கு உள்ள கூடுதல் வேலைப் பளு, அவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான உழைப்புச் சுரண்டல் போன்றவையும் சாதி, மத, இன, பாலின பாகுபாட்டு உணர்வுகளும், ஜூனியர்கள் மீதான உழைப்புசார் வன்முறையாக, உழைப்பு சார் ராகிங் கொடுமையாக வெளிப்படுகிறது.

இத்தகைய வன்முறைக்கு ஆளாவோர், மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். தற்கொலை செய்து கொள்கின்றனர். சில நேரங்களில் வன்முறைகளில் ஈடுபடுவோரும் தங்கள் எதிர்கால வாழ்வையே பாழாக்கிக் கொள்கின்றனர். எனவே, இத்தகைய மோசமான வேலைப் பண்பாட்டை (work culture) மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

குறிப்பாக விழிப்புணர்வு பரப்புரைகளை மேற்கொள்வதோடு, பணிச் சுமையை குறைக்கவும், சகோதரத்துவ உணர்வுடன் உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைமைகளையும் உருவாக்கிட வேண்டும்“

தொடர்புக்கு : 9940664343



த.லெனின்

# மோடி ஆட்சியில் சிதைக்கப்பட்ட இந்திய பொருளாதாரம்!

**மக்களின் வாழ்வாதாரத்தோடு பின்னி பிணைந்தது பொருளாதாரம் புதிய வேலை வாய்ப்புகள், பொருளாதார வளர்ச்சி, குறைவான அரசு தலையீடு, கருப்பு பணத்தை ஒழிப்போம், என பல பெரிய வாக்குறுதிகளோடு இந்திய அரசியலில் பிரதமரானார் நரேந்திர மோடி.**

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

எதுவுமே இல்லாத ஏழையரின் கொடிய பசி நோயை போக்க வேண்டும் வேண்டும் அதுதான் பொருளைப் பெற்றவன் தனக்கு அப்பொருளை பிற்காலத்திற்கு சேமித்து வைக்கும் இடமும் ஆகும் என்கிறார் வள்ளுவ பெருந்தகை.

2014 மற்றும் 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் மோடி பெற்ற வெற்றி, இந்திய பொருளாதாரத்தில் பெரிய சீர்திருத்தங்கள் வரும் எனும் நம்பிக்கையை வெகு மக்களிடம் ஏற்படுத்தியிருந்தது

ஆனால், நரேந்திர மோடி பிரதமராக இருந்த கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்திருக்கிறது என்பது நிரூபணமாகிவிட்டது. ஏற்கெனவே மந்தமாக இருக்கும் பொருளாதாரத்தை, கொரோனா பெருந்தொற்று மேலும் மந்தப்படுத்தியது என்பதே உண்மை

நரேந்திர மோடி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது 7 – 8 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, 2019 – 20 நிதி ஆண்டின் நான்காம் காலாண்டில் 3.1 சதவீதமாக சரிந்தது. இப்போது 5 – 6% ஆக இருந்து வருகிறது.

### வெடித்து கிளம்பிய வேலையில்லா திண்டாட்டம்!

2016ல் அறிவிக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை இந்திய பொருளாதாரத்தில் புழக்கத்தில் இருந்த 86% ரொக்க நோட்டுகளை துடைத்தெறிந்தது. அதோடு 2017 ஜூலையில் அவசர கதியில் அமல்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி வியாபாரங்களை கடுமையாக பாதித்தது.

கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2017 – 18 காலகட்டத்தில் இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம் 6.1 சதவீதமாக அதிகரித்தது என அதிகாரபூர்வ அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருப்பதாக சமீபத்தில் சி.எம்.ஐ.இ என்கிற அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் தெரிய வந்திருக்கிறது.

2021ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து 2.5 கோடிக்கும் அதிகமானோர் தாங்கள் ஏற்கனவே இருந்த வேலையை இழந்திருக்கிறார்கள். அத்தோடு 7.5 கோடிக்கு மேற்பட்டோர் மீண்டும் வறுமை கோட்டிற்கு உள்ளே வந்துள்ள வளர்ச்சியைதான் கண்டுள்ளனர். கடந்த 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 49.5 கோடி பேர் நிலம் அற்றவர்களாகவும் 45 கோடி பேர் உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்களாகவும் உள்ளனர்

83% அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் 40% மக்கள் முறைசாரா வாழ்விடங்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்று வசிப்பவர்களாகவும் உள்ளனர்

இந்திய நகர்ப்புற தெருக்களில் மட்டும் சுமார் சுமார் ஒரு கோடி பேர் தெரு வியாபாரிகளாக உள்ளனர். அதாவது நகர்ப்புற வேலை வாய்ப்பில் இது 15% ஆகும் அத்தோடு சுமார் 1.2 கோடி தனியார் காவலாளிகளாகவும் (மோடி கூறிய சௌக்கிதார்) வேலை செய்கின்றனர் இவர்களுக்கான மாத ஊதியம் 7000 ரூபாயிலிருந்து 9000 ரூபாயாக உள்ளது ஆனால் கடந்த 2016ஆம் ஆண்டின் அடிப்படையில் நாடு முழுவதும் சுமார் 2 கோடி பேர் காவல்துறையில் மட்டும் பணியில் இருக்கின்றனர் அவர்களுக்கும் இவர்களுக்குமான ஊதிய விகிதத்தை பார்த்தாலே தெரியும்.

### உற்பத்தியில், ஏற்றுமதியில் தேங்கிய இந்தியா!

மோடியின் முக்கிய முன்னெடுப்புகளில் ஒன்றான 'மேக் இன் இந்தியா' திட்டம், அரசின் தலையீடுகளைக் குறைத்து, முதலீடுகளை ஈர்த்து இந்தியாவை உலகின் ஒரு முக்கிய உற்பத்தி மையமாக மாற்றி இருக்க வேண்டும். ஆனால் அப்படியான அதிசயம் நிகழவில்லை.

இந்தியாவின் ஜிடிபியில் 25% உற்பத்தி இருக்க வேண்டும் என்கிற இலக்கு, கடந்த ஏழு ஆண்டுகளாக 15 சதவீதத்திலேயே தேங்கி நிற்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்திய பொருளாதாரத்தில் உற்பத்தி சார் வேலைவாய்ப்புகள் பாதியாகக் குறைந்திருக்கிறது என 'சென்டர் ஃபார் எகனாமி டேட்டா அண்ட் அனாலிசிஸ்' அமைப்பின் தரவுகள் கூறுகின்றன.

அதே போல ஏற்றுமதியும் கடந்த 10 ஆண்டுகளாக சுமார் 300 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிலேயே தேங்கி நிற்கிறது.

உலகமய சூழலில் சீன சந்தையை தட்டி பறித்தது போல பம்மாத்து காட்டும் அதே நேரத்தில் மோடியின் தலைமையில் இந்தியா தொடர்ந்து தன் ஏற்றுமதி சந்தையை சிறிய நாடான வங்கதேசம் போன்ற நாடுகளிடம் வேகமாக இழந்து வருகிறது

கடந்த 2009 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த தேசிய உற்பத்தியில் 31.5% ஆக இருந்த தொழில்துறை வளர்ச்சி கடந்த 2019 ஆம் ஆண்டில் 25% குறைந்துவிட்டது ஆனால் அதே காலகட்டத்தில் விவசாய வளர்ச்சி 16.7% ஆக இருந்தது அதாவது 60 விழுக்காட்டினரின் வளர்ச்சி எந்த அளவிற்கு புறம் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் இது காட்டுகிறது

### மோடி பெருமை பேசும் மதிய உணவு திட்டம்!

கடந்த கடந்த 201415 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் பட்ஜெட்டில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிய உணவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது 2015–16 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 11 ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டது

கடந்த 2014 ஆம் ஆண்டு உணவு பாதுகாப்பற்ற சுமார் ஆறு கோடி பேருக்கான நிதி ஒதுக்கீடு 31.6% லிருந்து கடந்த 2019 ஆம் ஆண்டில் 28% மாக குறைக்கப்பட்டது

கடந்த 2011 – 12 மற்றும் 2017 – 18 ஆண்டுகளுக்கு இடையேயான நுகர்வு செலவு 3.7% விழுந்துவிட்டது என்று என் எஸ் எஸ் ஓ வின் கசிவிடப்பட்ட கணக்கெடுப்பு கூறும் நிலையில் சத்தற்ற உணவு உண்போர் விகிதம் பெண்களின் 50% ஆகவும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் ரத்த சோகை பிடித்தவர்கள் கடந்த 2019 ல் 58.6% ஆக இருந்தது. ஆனால் அது 2021ல் அது 67% ஆக அதிகரித்துள்ளது எதை காட்டுகிறது? அது போலவே 15 – 49 வயதுடைய பெண்களிடமும் 53% லிருந்து 57% ஆக அதிகரித்துள்ளது

மோடிக்கு ஆதரவாக எப்போதும் எழுதும் மிகவும் பணக்கார பெண்ணான பயோகான் தலைவர் கிரண் மஜுந்தார் வரும் 2047 ஆம் ஆண்டு இந்தியச் சமூகம் மின்னணு தொழில்நுட்பத்தால் வழி நடத்தப்படும் நிலைக்கு வரும் என்றும் இந்திய மருந்து சந்தை சந்தை 50 பில்லியன் டாலர் என்ற நிலையில் இருந்து 500 பில்லியன் டாலராக வருமானம் 10 மடங்காக உயரும் (அதாவது 50% மக்களை வாட்டிடும் விதத்தில்) என்று வாயில் நீர் ஒழுக லாபத்திற்காக நமது மக்களை நோயாளியாக்க துடிக்கிறார்கள் என்றால் இது பணத்தாசையா? பிணத்தாசையா?




### பணம் படைத்தவனே வாழ முடியும்!

ஆக்ஸ்பாம் "இந்தியா சமத்துவமின்மை கொல்லும்" என்ற தலைப்பில் இந்த ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. அதில் இந்தியாவின் 100 பெரும் பணக்காரர்களின் சொத்து. மதிப்பு கடந்த 2020 இல் 23.14லட்சம் கோடியிலிருந்து 53.16 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளதையும் வறுமைக்கோட்டுக்கு மேலே இருந்த இருந்த 4.6 கோடி இந்தியர்களை மீண்டும் அதீத வறுமை கோட்டுக்கு கீழே அது தள்ளி உள்ளதையும் அழுத்தமாகச் சொல்லி உள்ளது.

இந்தியாவின் மேல்தட்டு 10% மக்கள் ஒட்டுமொத்த தேசிய செல்வ வளத்தில் 77% தன்னகத்தே கொண்டுள்ளனர். கடந்த 2017ல் உருவாக்கப்பட்ட செல்வ வளத்தில் 73% பெரும் பணம் படைத்த 1% இடம் குவிந்து மறுபுறத்தில் 67 கோடி இந்தியர்களின் அதாவது மிகவும் ஏழைப் பகுதியினரான அவர்களுக்கு செல்வ வளத்தில் 1% தான் உயர்ந்துள்ளது என்பது உண்மையை உரக்கச் சொல்கிறது

101 ஆக இருந்த இந்திய கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 2022 – 23ல் 142 ஆக உயர்ந்துள்ளது இந்தியா ஒவ்வொரு நாளும் புதிதாக 70 புதிய லட்சாதிபதிகளை உருவாக்குகிறது என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலக ஆக்ஸ்பாம் கருத்தின் படி இந்த சமத்துவம் இல்லா பொருளாதார முறையால் ஒவ்வொரு நாளும் 21,000 மக்கள் மடிகிறார்கள் என்ற அதிர்ச்சியான தகவலை தெரிவித்துள்ளது காங்கிரஸ் ஆட்சியில் கூட இந்த பிரச்சனை இருந்தது ஆனால் மோடியின் பாஜக ஆட்சியில் இதனை மிகவும் கொடூரமான முறையில் அதிவேகப்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

### கருப்பு பணப் பிடியில் இந்திய பொருளாதாரம்!

அதிக அளவில் நிதி தேவை உள்ள நிலையில் வரி கட்டாத லஞ்ச ஊழல் முறைகளால் முறைகேடாக திரட்டப்பட்ட பணம் கருப்பு பணம் என்று அழைக்கப்படுகிறது இது ஒரு நிழல் பொருளாதாரம் ஆக இந்திய உண்மை பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது இந்தியாவின் கருப்பு பணம் நமது ஒட்டுமொத்த தேசிய உற்பத்தியில் 62 சதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது அது 93 லட்சம் கோடி ரூபாய் ஆகும் இது நமது ஒட்டு மொத்த விவசாயம் தொழில் துறை உருவாக்கிய 39% ஜிடிபியை காட்டிலும் பெரியது


இதன் அடிப்படையில் கடந்த 40 ஆண்டுகள் கருப்பு பணத்தை சராசரியாக 5 % என்றால் கூட அது வளர்ச்சிக்கு வழி அமைக்கும் என்று வைத்துக் கொண்டால் கூட இன்று அது 1,050 லட்சம் கோடியாக அதாவது 15 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக இந்தியா மாறியிருக்கும் இந்தியர்களின் தனி நபர் வருமானம் கூட

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## வினாடி - வினா

1. நெருப்பு எரிவதற்கு இந்த வாயு அவசியமாகும். அது எது?
2. சூரியனில் இருந்து பூமிக்கு ஒளி (Light) பயணிக்க எவ்வளவு நேரம் ஆகும்?
3. ஒளி (Light) நொடிக்கு எத்தனை கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்க கூடியது?
4. அத்திரப்பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகள் எத்தனை ஆண்டுகள் பழமையானவை?
5. "திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்" நூலை எழுதியவர் யார்?
6. சீனப் புரட்சியின் போது மாசேதுங் தலைமையில் நடந்த நீண்டபயணத்தின் தொலைவு?

விடைகள் 12 ஆம் பக்கம்



# தென்பெண்ணையாறு நதிநீர் தீர்ப்பாயம் மவுனம் காத்துவரும் ஒன்றிய அரசு



பி.எஸ்.மாசிலாமணி

**பெண்ணையாறு என்ற பெயரில் இரு நதிகள் ஊர் வந்து, பேர் சொல்லி வங்கக்கடலில் சங்கமம் ஆகிறது.**

வடபெண்ணையாறு ஆந்திராவில் உருவாகி நெல்லூரின் அருகே கடலில் சேர்கிறது. தென்பெண்ணை ஆறு கர்நாடகாவில் உள்ள நந்தி துர்க்கத்திற்கு அருகே சின்ன கேசவ மலைப் பிரதேசத்தில் உருவெடுத்து 12 கிலோமீட்டர் கர்நாடகாவில் ஓடி; ஓசூர் பாகுபலி கிராமத்திற்கு அருகே தமிழ்நாட்டில் நுழைகிறது. இங்கு 320 கிலோ மீட்டர் பாய்ந்து கடலூர் அருகே வங்கக்கடலின் வரவேற்பில் சங்கமம் ஆகிறது.

தமிழ்நாட்டை நோக்கி ஓடிவரும் இந்த ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி நீர்த்தேக்கம் உள்ளது. இதன் கீழே கிருஷ்ணகிரி; சாத்தனூர், தும்பலஹல்லி, பாம்பாறு, வாணியாறு ஆகிய நீர்த்தேக்கங்கள் பெண்ணையாற்றிலும் அதன் துணை நதிகளிலும் அமைந்துள்ளன. மேலும் தொரப்பள்ளி, அலியாலம், சுப்பகிரி, பூதநத்தம், அயர்னபள்ளி, மகாபலராவ், உலகமங்கலம், கடவரஹள்ளி, புலிகுண்ட நல்லா, எனக்குல்லா, குலியாலம், கங்கலேரி, நெடுங்கல், குமாரப்பட்டி, தாம்பல், திருக்கோவிலூர், எல்லீஸ் செளல்டிரி, சொர்ணாவூர் ஆகிய 18 அணைக்கட்டுகள் உள்ளன. சிறியதும் பெரியதுமான 113 ஏரிகள் உள்ளன. உரிய அளவு நீர் வந்தால், தமிழ்நாட்டிற்கு 19.4 டிஎம்சி கிடைக்கும். இதன் சாகுபடி பரப்பு 10.30 லட்சம் ஏக்கர் மட்டுமே.

இதன் நீரோட்டத்தால் கிடைக்கும் நிலத்தடி நீர் எடுப்பு மூலமே சாகுபடி அதிகமாக நடக்கிறது. ஆற்று நீர்வரத்து உரிய அளவு வந்தால் தான் நிலத்தடிநீரும் எடுக்க முடியும்.

கடந்த பல ஆண்டுகளாக தென்பெண்ணையில் நீர்வரத்து குறைந்ததால் நிலத்தடி நீரும் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது. தென்பெண்ணை ஆறு இறுதியில் சொர்ணாவூர் அணைக்கட்டை தாண்டி உபரி நீராக கடலுக்குச் செல்கிறது. இதைத்தான் உச்சநீதிமன்றத்தில் கர்நாடகம் நீர் விரயம் என தமிழக அரசுக்கு எதிரான வாதமாக வைத்துள்ளது.

இரு பருவமழையும் சம பங்காக தென் பெண்ணையாற்று வழித்தடங்களில் பொழிந்து வருவது பெரிய விஷயமாகும். இந்த சூழலில் தான் பெருகி வரும் வெள்ள நீர் கடலுக்கு செல்கிறது. இந்தியாவின் பிற நதிகளிலும் லட்சக்கணக்கான டி.எம்.சி தண்ணீர் ஒவ்வொரு ஆண்டும் கடலுக்குச் செல்கிறது. கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் உபரிநீரும் கடலுக்கு தான் செல்கிறது.

தொடர்ந்து திசைமாற்றி ஆற்று நீரை தன் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்கிறது. புதிய புதிய தடுப்பணைகளை ஒன்றிய நீர்வளத்துறை, சுற்றுச்சூழல் துறை, வனத்துறை ஆகியவற்றின் அனுமதி பெறாமலும் தமிழகத்தின் எதிர்ப்பை மீறியும் கட்டி வருகின்றது.

கர்நாடக மாநிலம் நந்தி மலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆறு தட்டக்கல், மாதேப்பள்ளி, முகுலூர் வழியாக





தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படும் தமிழ்நாடு, இதற்கான சேமிப்புகலன்களை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆனால் இதை காரணம் காட்டி தமிழகத்தின் பாரம்பரிய உரிமையை தடுத்திட முடியாது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலமான 1892ல் காவிரி போல தென்பெண்ணையாறு நீர்பங்கீடு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது 1925ல் புதுப்பிக்கப்பட்டது. ஆனால் 50 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் புதுப்பிக்க கர்நாடகம் மறுத்து, தங்கள் மாநிலத் தேவைக்கே இந்த நீரை பயன்படுத்தி கொள்கிறது.

இந்த படுகையில் புவிசார் குறியீடு பெற உள்ள பண்ருட்டி பலாப்பழம்; சர்க்கரை பிழிதிறன் கூடுதல் கொண்ட கரும்பு; டெல்டாவை பின்னுக்கு தள்ளும் நெல் விளைச்சலும் உண்டு. தென்னை, பாக்கு பயிர்களும் இங்கே விளைகிறது.

தென்பெண்ணை ஆறு பாசன கட்டமைப்பு என்பது இரண்டாம் நூற்றாண்டு முதல் தொடரக் கூடிய பழமையும் பாரம்பரியமும் மிக்கது. இயற்கை வழி நீரோட்டத்தின் பாதையை கர்நாடக அரசு

தமிழ்நாட்டின் கொடியாலம் அணைக்கு வந்த பின்; ஓசூர் அருகே உள்ள பாகலூர் வழியாக கெலவரப்பள்ளி அணைக்கு வருகிறது. இந்த அணையின் மூலம் தான் மேற்கண்ட மாவட்டங்கள் நீர் பயன்பாட்டை பெறுகின்றன.

ஓசூர் அருகே கெலவரப்பள்ளி அணைக்கு வரக்கூடிய தென்பெண்ணை ஆற்று நீரை கர்நாடக மாநிலம் முகுலூரில் நீர் இறைக்கும் கனரக எந்திரங்கள் மூலம் உறிஞ்சி, அங்குள்ள ஏரிகளை நிரப்பும் பணியை அம்மாநில அரசு மேற்கொண்டது. இதற்காக எண்ணற்ற தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

பின் இதனை 12 கிலோமீட்டர் தூரம் கொண்டு சென்று லக்கூர் ஏரியை நிரப்பி, பாசன விரிவாக்கத்தை மேற்கொள்ளும் பணிகளை கர்நாடகம் செய்து வருகிறது. இதனால் தமிழக மாவட்டங்கள் பெரும் பாதிப்படைந்து வருகின்றன.

இப்படியான நிலைகளை கர்நாடகம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதால் தமிழக அரசு ஒப்பந்தப்படி தண்ணீர் பெறுவதற்காக உச்சநீதிமன்றத்தை நாடியது. பல ஆண்டுகளாக நீடிக்கும் இந்த வழக்கில், மாநிலங்களுக்கு இடையிலான நீர் தகராறு சட்டம் 1956ன் படி, பெண்ணையாறு நதிநீர் தகராறு தீர்ப்பாயம் அமைத்திட வேண்டும் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. அதன் பிறகு பலமுறை உச்சநீதிமன்றம் அவகாசம் வழங்கியும் தீர்ப்பாயம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்கவில்லை.

இந்நிலையில், கர்நாடக மாநில அரசின் துணை முதலமைச்சர் டெல்லி சென்று, ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரிடம் பெண்ணையாறு தீர்ப்பாயம் அமைக்க கூடாது என வலியுறுத்தி விட்டு வந்துள்ளார்.

இயற்கை தந்த கொடை தான் மழைநீர். மழை பொழிவதற்கான கருமேகங்களை ஈர்க்கும் நீருக்கும் எல்லை இல்லை. அதை மழையாகப் பெறும் மாநிலமே முழு உரிமை கொள்ளலாமா?

சில காலங்களில் பெருகிவரும் வெள்ள நீரைத் திறந்துவிட்டு கீழ்மடை பகுதிகளை பாதிக்கச் செய்வதுஎன்ன நியாயம்?

எனவே கீழ்மடை பாசனத்திற்கு தான் முன்னுரிமை என்று சர்வதேச கோட்பாடு கூறுகிறது.

தமிழகம் தன் தேவைக்குரிய தண்ணீரை அண்டை மாநிலங்களில் இருந்து பெற வேண்டிய நிலையில் தான் பூகோள அமைப்பு உள்ளது.

குடிநீர் பஞ்சம் என்பது உணவு தட்டுப்பாட்டை விட மோசமான நிலைகளை உருவாக்கும். எனவே, நீர்த் தேவை மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிரினங்களின் உயிர்ப்பின் அடிப்படையுமாகும்.

மாநிலங்களுக்கு இடையே நதிநீர் பங்கீடு பிரச்சனைகள் பல எழுந்துள்ளன. இவற்றுக்குத் தீர்வு காணப்படாததால், தீவிரமடைந்து வருகின்றன. இப்பிரச்சனைகளை அரசியல் சட்டத்தின் படியும் அதன் வழிகாட்டலிலும் தீர்வு காண வேண்டிய ஒன்றிய அரசு பாரபட்சமான நிலைப்பாட்டை எடுக்கிறது. இதனால் மாநிலங்களுக்கு இடையே எழும் நதிநீர்பங்கீட்டுச் சிக்கல்கள், மாநில மக்களுக்கு இடையிலான பிரச்சனையாக உருமாறுகிறது.

எனவே காலம் தாழ்த்தாமல் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டபடி, பெண்ணையாறு நதிநீர் தீர்ப்பாயத்தை ஒன்றிய அரசு உடனடியாக அமைத்திட வேண்டும். இரு மாநிலங்களின் நல்லுறவுக்கும் இது அவசியமாகும்

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

1800 டாலார் அதாவது சுமார் 1 லட்சம ரூபாயிலிருந்து 7.4. லட்சம் ரூபாயாக அல்லது 11000 அமெரிக டாலராக அதாவது நாம் ஒவ்வொருவரும் 7 மடங்கு அதிக பணக்காரர்களாக மாறியிருப்போம்.

ஆனால் இன்று நமது ஜிடிபி 274 லட்சம் கோடி ரூபாய் தான் அதாவது 3.3 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

இதில் 170 லட்சம் கோடி ரூபாய் வெளிநாடுகளுக்கும் வரியில்லா சொர்க்க புரிகளுக்கும் சென்றுவிட்டது அசோச்செம் கணக்கின்படி இந்தியாவில் விற்பனையாகும் 25% மருந்துகள் போலியானவை அல்லது தரமற்றவை ஜவுளி துறையில் ஆண்டுக்கு 30,000 கோடி ரூபாயும் புகையிலைப் பொருட்கள் விற்பனை அதன் மூலம் 16 ஆயிரம் கோடி ரூபாயும் மின்னனு பொருட்கள் மூலம் 22,000 கோடி ரூபாயும் மூலதன பொருட்கள் மூலம் 52000 கோடி ரூபாயும் அதாவது 1 டிரில்லியன் கள்ளச் சந்தைகளில் புழக்கத்தில் உள்ளதாக கூறப்படுகிறது

எனவே ஒவ்வொரு ஆண்டும் 55 லட்சம் கோடி ரூபாய் கருப்பு பணம் 170




லட்சம் கோடி ரூபாய் என 225 லட்சம் கோடி ரூபாய் வீணடிக்கப்ப டுகிறது என்றால் இந்தியாவின் மறு முதலீட்டிற்கு எங்கே போவது? அதற்காக தான் தாறுகெட்ட தனியார் மயமென முழங்குகிறது. நமது செல்வ வளத்தை பெரும் பணக்காரர்களே வளைத்துக் கொள்ளும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் இதனை எப்படி மாற்ற முடியும்?

### கருப்புப் பணத்தின் விளைவுகள்!

எனவேதான் நாம் உலக பசிக்குறியீட்டில் 107 வது நாடாக மொத்தமுள்ள 122 நாடுகளில் இருக்கிறோம். அத்துடன் உலக உணவு பாதுகாப்பு குறியீட்டில் 71/113 வது இடத்திலும், உலக மகிழ்ச்சி குறியீட்டில் குறியீட்டில் 136/140, மனிதவள வளர்ச்சி குறியீட்டில் 132/191, ஊழல் அல்லது வெளிப்படைத் தன்மை குறியீட்டில் 139 லும் ஜனநாயக குறியீட்டில் 108/202 ஊடக சுதந்திர குறியீட்டில் 150/180 வது இடத்திலும் உள்ளோம்.

சுமார் 15 கோடி இளைஞர்கள் வேலையற்றவர்களாகவும் சுமார் 45 கோடி மக்கள் உள்நாட்டு புலம்பெயர்ந்தவர்களாகவும் இருக்கிற நிலையை அடைந்து விட்டோம்

### பணக்காரர்களுக்கு வரிச்சலுகை ஏழைகளுக்கு வரி கொடுமை !

பெரும் பணக்காரர்களுக்கான செல்வவரியை கடந்த 2016 ஆம் ஆண்டு மோடி அரசு முற்றாக நீக்கிவிட்டது. ஏற்கனவே 30% ஆக இருந்த கார்ப்பரேட் வரியை அவர்கள் மீது பெரும் கருணை கொண்டு 22% ஆக குறைத்துவிட்டது இதன்மூலம் ஒன்றிய அரசுக்கு 1.84 லட்சம் கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டது இதனால் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களில் முதலீடு செய்ய முடியவில்லை என்று நாடாளுமன்ற மதிப்பீட்டு குழு சுட்டிக்காட்டியுள்ளது

பெரும்பணக்காரர்கள்மீதுவிதிக்கப்படும் வரி தொடர்ந்து குறைக்கப்பட்டு வரும் நிலையில் சாதாரண ஏழை எளிய மக்கள் மீது விதிக்கப்படும் மறைமுக வரி 63.69% ஆக உயர்ந்து விட்டது பெரும் தொற்று காலத்தில் கூட பெட்ரோல் டீசல் மீது மிக மிக அதிகமான வரி விதிப்பை செய்தது கருணையில்லா ஒன்றிய மோடி அரசு!

ஆக எல்லா வளங்களும் இருந்தும் அதனை அனைவருக்கும் பகிர்ந்து அளிக்காமல் தனது நண்பர் அதானிக்கும் அம்பானிக்கும் அள்ளி அள்ளி கொடுப்பதும் மறுபுறத்தில் கோடானு கோடி ஏழை எளிய மக்களுக்கு பெரும் சுமைகளையும் தண்டனைகளையும் அளிப்பதே இந்த இந்துத்துவ பாசிச மாடல்!

எனவே வரும் 2024 இல் பெரும் ஆட்சி மாற்றத்தோடு காட்சி மாற்றமும் நிகழ்ந்தாக வேண்டும் மக்களுக்கான மாற்று பொருளாதார கொள்கைகளை முன்வைத்து செயல்படும் ஒரு ஆட்சியாக அது அமைய வேண்டும் அத்துடன் மோடியின் ரூத்ரதாண்டவத்தால் அழிந்து போன இந்திய பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க வேண்டும்!!

தொடர்புக்கு 9444481703

# நுண்கடன் தொல்லையால் துயர்படும் பெண்கள்



சு.தமிழ்ச்செல்வி ராஜா

**தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தால் மாறி மாறி பாதித்து வருகின்றன. 2018ல் கோரத்தாண்டவம் ஆடியது கஜா புயல்,தென்னை, வாழை, பலா எழுமிச்சை, நாரத்தை, கிடாரங்கா போன்ற நீண்ட கால விவசாய பயிர்கள் அனைத்தும் 90% அழிந்து போயின. ஏராளமான கால்நடைகள் மடிந்தன, வீடுகளை இழந்து நிற்கதியாய் முகாம்களில் தஞ்சம் அடைந்தார்கள்.**

புயல் பாதித்த நாகை மயிலாடுதுறை திருவாரூர் புதுக்கோட்டை ராமநாதபுரம் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியது .வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் அதிலிருந்து இன்று வரை மீள முடியவில்லை இத்துயரங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

டெல்டா பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர் . தொடர்ந்து வேலை வருவாய் இழப்பை சந்தித்து வருகின்றனர் . குடும்பத்தில்இளைஞர்கள் . இளம் பெண்கள் தென்னிந்தியாவின் “ மான்செஸ்டர்” என போற்றப்படும் கோவை, திருப்பூர்,போன்ற கொங்கு மண்டல பகுதிகளுக்கு புலம்பெயர்ந்து ஆடைகளை உற்பத்தி செய்யும் கம்பெனிகளில் பணியாற்றும்நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

இதன் மூலம் வரும் வருமானத்தையே குடும்பங்களுக்கு அனுப்பி வைத்து குடும்பத்தை காப்பாற்றி வருகின்றார்கள். கொரோனா கால பொருளாதார இழப்பில் இருந்து இன்று வரை அப்பகுதி மக்களால் மீள முடியவில்லை, இதனால் வேலை வாய்ப்பை இழந்து தொழில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக விவசாய உற்பத்திக்கு பெரும்பகுதி நவீன இயந்திரங்களையே பயன்படுத்தி வருகின்றார்கள் . இதனால் ஆண்,பெண் தொழிலாளர்களுக்கு வேலையின்மையால் துயரப்படுகின்றனர்.

மேலும் மதுவிற்கு அடிமையான கணவர் மற்றும் மகன்களின் பணத்தேவையும், சமாளிக்க வேண்டிய பொறுப்பு பெண்களிடத்திலேயே உள்ளது . குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கந்துவட்டி, நுண்கடன் பெற குடும்ப தலைவி தள்ளப்படுகிறாள் . வேளாண்மை ஏழ்மையிலிருந்து குடும்பங்களை மீட்டெடுக்கும் உழைப்பின் மீது மோகம் கொண்ட பெண்கள் அனைத்தையும் சுமப்பதை அறிந்து நுண்கடன் நிறுவனங்கள் (மைக்ரோ பைனான்ஸ் ) என்ற பெயரில் கந்து வட்டிக்காரர்களின் பார்வை திரும்பி உள்ளது . குறைந்தது 20 குடும்பங்களை கொண்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு இதை சரியான முறையில் நுண்கடன்,கந்து வட்டி கம்பெனிகள் அவர்களின் வறுமையை பயன்படுத்திக்கொண்டு அவர்களுக்கு பணம் குறித்தான ஆசை வார்த்தைகளை கூறி கொஞ்சம் கொஞ்சமாக பேசி தங்கள் நிறுவனத்திடம் இருந்து கந்து வட்டிக்கு கடன் பெற வைத்தனர் .

கடன் பெற நீங்கள் தரவேண்டியது இரண்டு போட்டோ ஆதார் அட்டை வங்கி கணக்கு புத்தக நகல் மட்டுமே போதுமானது உங்கள் வங்கி கணக்கில் இன்சூரன்ஸ் பணம் பிடித்தம் போக மீதத்தொகை வங்கியில் ஏறிவிடும் என சுலபமாக கூறிவிட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் கருப்பு பணம் வறுமையில் வாடும் ஏழைகள் மூலம் வெள்ளை பணமாக மாற்றிக் கொண்டே இருக்கின்றார்கள். இதைவிட கொடுமை வேறு எதுவும் உண்டோ ! இதன் மூலம் கந்துவட்டி கொள்ளையர்களிடம் கிராமம் கிராமமாக பாதிக்கப்படும் பெண்கள் அடிமையாக்கப்படுகிறார்கள்.

தினம் தினம் அந்தப் பெண்கள் எங்களை சந்திக்கின்ற போது எங்களிடத்தில் புலம்பி அழுவது மிகவும் வேதனையாக இருக்கிறது. குழுக்கடன் பெற்றவர்கள், தவணை, குறித்த தேதியில் குறித்த காலத்தில் ஒருவர் கட்டவில்லை என்றால் நுண்கடன் நிறுவன வசூல் ஏஜென்ட்கள் குழு பெண்களை மிரட்டி அவமானப்படுத்தி வெளியே சொல்ல முடியாத அளவிற்கு அமர வைத்து விடுகிறார்கள்.

கொரோனா வந்து “செத்தா போய்ட்டீங்க “ சோறு திங்குறியா” வேறு ஏதும் “திங்குறியா” தவணைத் தவறினா ஓ.டி. போட்டுடுவேன் நீ இனிமே எங்கேயும் கடன் வாங்க முடியாது 21இடத்தில் கையெழுத்து வாங்கியுள்ளோம் உன்னுடைய வங்கி கணக்கை தடை செஞ்சிடுவோம், என்று சில இடங்களில் மிரட்டி விடுகிறார்கள். அவர்கள் கடன் பெற்றதால் கண்ணியமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் நுண்கடன் முகவர்களின் அடாவடித்தனத்தால் அசிங்கப்பட்டு எழுத முடியாத கொச்சை வார்த்தைகளைச் சொல்லி கிண்டல் கேலி செய்வதாக எங்களிடத்தில் கூறுகிறார்கள், எங்கள் மாதர் அமைப்புகளில் கந்துவட்டி கொடுமை குறித்து கூறும் போது முழு பங்கேற்புகளுடன் நாங்கள் தீர்த்து வைத்திருக்கின்றோம். இருந்த போதிலும் சில இடங்களில் இவர்களின் அட்டூழியத்தால் கெடுபிடியால் அவமானம் கருதி கும்பகோணம் திருப்பனந்தாள் என்னும் ஊரில் ஒரு பெண்ணும், திருவாரூர் மாவட்டத்தில் பேரளம் என்கின்ற ஊரில் மற்றும் ஒரு பெண்ணும் தங்களுக்கு தீ வைத்துக் கொண்டு 2000 ரூபாய் காக தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலைமையில் தான் கிராமப்புற பெண்கள் தள்ளப்பட்டு வருகிறார்கள்.

மதுபழக்கத்தால் தனது உடல்வலிமையை இழந்த கணவன்மார்களின் வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதோடும், குறைந்த சம்பளத்தில் பெண்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குகிறார்கள். இதனால் பெண்கள் நாள்தோறும் 100 நாள் வேலை, சித்தாள் வேலை விவசாய கூலி வேலை வீட்டு வேலைக்கு செல்வது சிறு,குறு நிறுவனங்களில் வேலை செய்வது என்று குறைந்த வருமானத்தின் மூலம் கந்து வட்டி கொடுமையில் இருந்து தப்பிப்பதற்காக உழைத்து வருகின்றார்கள் .ஒரு சில கணவன்மார்கள் பெரும்பாலும் தொடர்ச்சியாக ஊரில் இருப்பது இல்லை வேலைக்காக திருப்பூர், கோவை, சென்னை, கேரளா, போன்ற வெளிமாநிலங்களுக்குச் சென்று விடுகின்றார்கள் . இவர்களின் பலர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி குடும்பத்தின் தொடர்பை கூட துண்டித்து விடும் ஆண்களும் உண்டு.


நாகை திருவாரூர் மாவட்டங்களில் நிலத்தடி நீர் இல்லாததால் வேலை உத்தரவாதம்இழந்தபலநூறுகிராமங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பெண்கள் அதிகாலை யிலையே அருகில் இருக்கும் பேருந்து நிலையங்களில் பேருந்துக்கு காத்திருக்கும் போது மட்டுமே அவர்களை நாங்கள் நேரில் சந்திக்க முடியும் குறிப்பாக மூன்று மணி அளவில் வேளாங்கண்ணி முதல் கோட்டூர் வரையிலான சாலைகளில் தஞ்சை செல்லும் பேருந்துகள் மூலம் 100 கிலோமீட்டர் வரை பயணம் செய்து நிலத்தடி நீரை நம்பி சாகுபடி செய்யும் மன்னார்குடி, நீடாமங்கலம், அம்மாபேட்டை, ஒரத்தநாடு தஞ்சாவூர் பகுதிகளுக்கு பேருந்தில் சென்று இரவு 9 மணிக்கு வீடு திரும்புகின்றார்கள். அதுபோல் திருவாரூர் பகுதியில் இருந்தும், நீடாமங்கலம், வலங்கைமான் போன்ற பகுதிகளுக்கு வேலைக்குச் சென்று நடவு அல்லது களை எடுத்து வருகின்றார்கள்.

“அதுமட்டுமல்லாமல் அவர்கள் கான்ட்ராக்ட் நடவு நடுவதற்கு காலை 7 மணி அளவில் வயலில் இறங்கினால் தான் இரவுக்குள் அந்தப் பணியை முடித்து ஒப்பந்த சம்பளத்தை பெற முடியும். இல்லையெனில் 250 அல்லது 300 ரூபாய் கூலி தான் கிடைக்கும். இதன் மூலம் குடும்பச் செலவை ஈடு செய்ய முடியுமா? கட்டுபடி ஆகுமா? இவர்கள் அதிகாலையில் இரண்டு மணிக்கு எழுந்து குழந்தைகளுக்கு உணவு சமைத்து கணவனுக்கு தேவையான பணிகளை செய்து வைத்துவிட்டு மூன்று அல்லது நான்கு மணிக்கு பேருந்தில் ஏறி ஏழு மணிக்கு குறிப்பிட்ட இடத்திற்கு செல்வார்கள் அவர்கள் வீடு திரும்பும் போது இரவு ஏழு அல்லது எட்டு மணி ஆகிவிடும். வடுவூர் பகுதிகளில் பலமுறை பேருந்து பயணத்தின் போது உடன் பயணிப்பது உண்டு அப்போது அவர்களின் ஊரின் பெயரையும் பணிச்சுமையையும் குடும்பப் பின்னணியையும் கேட்டால் அதிர்ச்சி அடைந்து விடுவீர்கள் ! எப்போது வீட்டிற்குச் சென்று இரவு உணவு குழந்தைகளுக்கு கொடுப்பீர்கள் என்று கேட்டால் நாங்கள்போய்தான் அன்றாடம் சமைத்துக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். உறங்கும் குழந்தைகளுக்கும் படித்துக் கொண்டிருக்கும் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் இரவு 11 மணி அளவில் உணவு கொடுப்போம். அதன் பிறகு தான் நாங்கள் படுப்பதற்கு செல்ல இரவு 12 மணி ஆகிவிடும் என்கின்றார்கள் இதைக் கேட்கின்ற பொழுது ஒரு பாடல் வரி ஞாபகத்திற்கு வருகிறது.

**இழுத்து இழுத்து வேலை செய்து**
**இருட்டுறப்ப கூலி வாங்கி**
**புழுத்தரிசி கஞ்சி வெச்சு**
**பசித்தணிய படுத்திருந்தேன்**
**கும்பி தனிஞ்ச சுகம்**
**கொஞ்சம் கூட மாறாமல்**
**வம்புத்தனமாய்**
**ஏன் வந்துதித்தாய் சூரியனே !!**

அப்படியானால் இவர்கள் உறங்கும் நேரம் இரண்டு மணி நேரம் கூட இல்லை இது அடுக்குமா? இப்படித்தான் நீங்கள் சம்பாதிக்க வேண்டுமா? ஏன் ? 100 நாள் வேலை நடக்கின்றதே! அந்தப் பணியில் நீங்கள் ஈடுபடலாமே என்று கேட்டால், எங்களுக்கு 100 நாள் வேலை தொடர்ந்து எங்கே கொடுக்கிறார்கள் சென்ற ஆண்டு 21 நாட்களும், இந்த ஆண்டு இதுவரை 11 நாட்கள் மட்டுமே வேலை கொடுக்கின்றார்கள் ஆண்களுக்கு வேலை இல்லை, குழு கடன் வாங்கி தொலைத்து விட்டோம், அதை கட்டவில்லை என்றால் எங்களை அவமானப்படுத்தி விடுகிறார்கள் அது மட்டுமா? தினம் குடிக்க அரசாங்கமே டாஸ்மார்க் கடைகளை திறந்து வைத்து விடுகிறார்கள். எங்கள் கணவன்மார்களுக்கு நாளை குடிக்க இன்றே பணம் கொடுத்து விட வேண்டும் . இல்லை என்றால் குடும்பத்தில் சண்டை தான் நடக்கும். நாங்கள் உறங்கக்கூடிய அந்த ரெண்டு மணி நேரமும் இல்லாமல் போய்விடுமோ ! என்கின்ற சங்கடங்கள் எங்களுக்கு உண்டு எனவே குழந்தைகளுக்கான படிப்பு செலவுகள் கல்யாணம், காதுகுத்து, சடங்குகள் அனைத்திற்கும் சென்றுவர பணம் தேவைப்படுகிறது எனவே நுண்கடன் வாங்கி சிக்கி விடுகிறோம் இந்த கடனை கட்டுவதற்காகவே நாங்கள் நித்தம் நித்தம் நாளை எங்கு வேலைக்கு செல்வது என்கின்ற சிந்தனையோடு தான் உறங்க செல்கின்றோம்.

இவர்களை எப்படி மீட்டெடுக்க போகின்றோம் ! இவர்களின் துயர் துடைக்க எங்கள் பகுதி பெண்களுக்கு அரசாங்கம் இங்கு கிடைக்கும் வேளாண் பொருட்களை மூளைப் பொருளாகக் கொண்டு அவர்கள் வேலை செய்வதற்கான தொழிற்சாலைகளை உருவாக்கி வாழ்க்கை உத்தரவாதம் தரக்கூடாதா? என்று தீரும் இவர்களின் ஏக்கம் ! என்று உயரும் இவர்களின் வாழ்வாதாரம் இவர்களுக்கான உரிமை போராட்டங்களை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மேற்கொண்டுள்ளது. அரசு செவிசாய்க்குமா? கனவுகள் மெய்ப்பட போராட்டமே ஒரே வழி !



தொடர்புக்கு: 9786877195

## ⟵ முக்கிய அறிவிப்பு ⟶

ஜனசக்திக்கு எழுதும் கட்டுரைகள் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் டைப் செய்து வேர்டு பைலில் இமெயிலில் அனுப்ப வேண்டும் வாரம் தோறும் திங்கள்கிழமைக்குள் கிடைக்க வேண்டும்.

இயக்கச் செய்திகளை டைப் செய்து, செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் ஜனசக்திக்கு கிடைக்கும் வகையில் janasakthieditor@gmail.com இமெயிலுக்கு மட்டும் அனுப்ப வேண்டும். யாருடைய வாட்ஸ்அப் எண்ணுக்கும் அனுப்பக் கூடாது.

பிரச்சார நோட்டீஸ், மனுக்கள் போன்றவற்றை அப்படியே அனுப்பக் கூடாது. அவற்றை செய்தி வடிவில் சுருக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் குறித்த தொடர்புக்கு:
**டி.எம்.மூர்த்தி**, ஆசிரியர்: **9444360869**
**த.லெனின்: 9444481703**

ஜனசக்தி சமூக ஊடகங்கள் தொடர்புக்கு:
**வ.மணிமாறன்: 9500001224**

இயக்கச் செய்திகள் குறித்த தொடர்புக்கு:
**பிரதாப் சந்திரன்: 9382679798**

ஜனசக்தி விநியோகம், சந்தா குறித்த தொடர்புக்கு:
**கே.கணேசன்: 9444331138**

ஜனசக்தி பணம் செலுத்துதல் சம்பந்தமான தொடர்புக்கு:
**இளசை கணேசன்: 8220468816**

**ஆசிரியர் குழு,**
**ஜனசக்தி**

## பாலஸ்தீனத்தை பாதுகாத்திடுக

### அனைத்துக் கட்சி எம்பிக்கள் அறிக்கை



இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் கையெழுத்திட்டுள்ள அறிக்கை வருமாறு:

கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள், வன்முறை ஒருபோதும் தீர்வாகாது என்று நம்புகிறோம். ஏனெனில் அது அழிவு மற்றும் துன்பத்தின் சுழற்சிக்கு வழிவகுக்கிறது. எனவே சர்வதேச சமூகம் இன்னும் கூடுதலான முயற்சிகளை மேற்கொண்டு இந்த மோதலுக்கு அமைதியான தீர்வைக் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்பட்டு பாலஸ்தீன மக்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்திற்கு மதிப்பளிக்குமாறு சர்வதேச சமூகம் இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இந்த மண்டலத்தில் நீடித்த அமைதியை உறுதிசெய்ய, தீவிரமான அரசு சார்ந்த மற்றும் பலதரப்பு முயற்சிகளுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். காசாவில் நிலவும் நெருக்கடி மற்றும் பாலஸ்தீன மக்களின் துயரங்கள் குறித்து எங்களது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறோம். காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டு வீசி வருவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது இனப்படுகொலைக்கான முயற்சி என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் அப்பாவி உயிர்கள் மற்றும் வீடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க பகைமையைக் கைவிடுமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும், காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அவசரமாகவும் தடங்கல் இல்லாமலும் வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். மனிதநேயமற்ற இந்த சூழல் கருதி, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உடனடியாகவும் விரைவாகவும் எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, தண்ணீர், மருத்துவ உதவி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி சென்றடைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

"இங்கிலாந்து ஆங்கிலேயர்களுக்கு எவ்வளவு சொந்தமோ, பிரான்ஸ் பிரெஞ்சுக்காரர்களுக்கு எப்படி சொந்தமாகுமோ, அதேபோன்ற பொருளில் பாலஸ்தீனம் அரேபியர்களுக்குச் சொந்தமானது" என்று பாலஸ்தீன மக்களின் இறையாண்மை மற்றும் பிராந்திய உரிமைகளை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் மகாத்மா காந்தி கூறியதை நாங்கள் முழுமையாக வலியுறுத்துகிறோம். பாலஸ்தீன மக்கள் 75 ஆண்டுகளுக்கும் மேலாக அளவிட முடியாத துன்பங்களை அனுபவித்து வருவதை உணர்ந்து, அவர்களின் அவலநிலைக்கு முடிவு காண வேண்டிய நேரம் இப்போது வந்துவிட்டது என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

> பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பாலஸ்தீன மக்களுடன் தமது ஒருமைப்பாட்டை தெரிவிக்க பாலஸ்தீனிய தூதுவரை சந்தித்தனர். பாலஸ்தீன பிரச்சினைக்கு இந்தியாவின் நிலையான ஆதரவு நீர்த்துப் போகக்கூடாது. 1967க்கு முந்தைய எல்லைகள் மற்றும் கிழக்கு ஜெருசலேமை தலைநகராகமாக கொண்ட இரண்டு நாடுகள் என்ற தீர்வு அமைதியை நிலைநாட்ட முடியும்.
>
> **இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா (ட்விட்டர்) எக்ஸ் செய்தி.**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி 1967ல் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு, பாலஸ்தீனம் என்ற சுதந்திரமான நாட்டை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்துகிறோம். அத்தகைய அங்கீகாரம் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு நியாயமான மற்றும் நீடித்த தீர்வை உறுதி செய்வதற்கான ஒரு முக்கியமான படியாகும்.

பாலஸ்தீனமக்களுக்கு அவர்களின் விதிகளை அவர்களாகவே நிர்ணயித்துக் கொண்டு அமைதியோடும் பாதுகாப்போடும் வாழ இது வாய்ப்பளிக்கும்.

**இப்படிக்கு**

மணி சங்கர் அய்யர், முன்னாள் ஒன்றிய அமைச்சர்
மனோஜ் ஜா, எம்.பி.
கே.சி.தியாகி
திபங்கர் பட்டாச்சார்யா, சிபிஐ(எம்எல்)
டி.ராஜா, முன்னாள் எம்.பி.(சிபிஐ)
முகமது அப்சல், முன்னாள் எம்.பி
ஜெனா ஸ்ரீகாந்த், முன்னாள் அமைச்சர்
கே.ஆர். டேனிஷ் அலி, எம்.பி.
ஜாவேத் அலி கான், எம்.பி.
முசாபர் ஷா (ஜே-கே)
சுபாஷினி அலி, முன்னாள் எம்.பி.
சந்தோஷ் பாரதியா முன்னாள் எம்.பி.
ஷாஹித் சித்திக், முன்னாள் எம்.பி.
முகமது அதீப், முன்னாள் எம்.பி
நதீம் கான்
நிலோத்பல் பாசு முன்னாள் எம்.பி



அருண் நெடுஞ்செழியன்

# விளையாட்...
# கிரி...

**தற்போது இந்தியாவிலே நடைபெற்று வரும் 2023 உலகக்கோப்பை கிரிக்கெட் விளையாட்டுத் தொடர் போட்டியில், ஆர்எஸ்எஸ், பாஜகவின் இந்துத்துவ சித்தாந்த கலப்பாலும் நிர்வாகக் கோளாறாலும் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது.**

அண்மையில் நடந்து முடிந்த இந்தியா பாகிஸ்தான் போட்டியை இருநாடுகளுக்கு இடையிலான போராக ஆர்.எஸ்.எஸ், பாஜக ஆதரவாளர்கள் பரப்புரை செய்தார்கள்; ஜென்டில்மேன் விளையாட்டு எனப் புகழப்படும் கிரிக்கெட்டில் "விளையாட்டு உணர்வை" பின்னுக்குத் தள்ளி தேசிய வெறியையும் மத வெறியையும் ஊட்டியது பாஜக.

நடந்து முடிந்த இந்தியா பாகிஸ்தான் போட்டியில், முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணியினர், இந்தியாவின் சிறப்பான பந்து வீச்சால் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து பெவிலியன் திரும்பினர். இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முக்கிய மட்டைப்பந்து வீரர் முகமது ரிஸ்வான் அவுட்டாகி பெவிலியன் செல்லும் போது "ஜெய் ஸ்ரீராம்" என ரசிகர்கள் தொடர்ச்சியாக முழக்கம் எழுப்பினர். அகமதாபாத் ரசிகர்களின் இந்த மதவாத சீண்டல் முழக்கம் அடுத்த சில மணிநேரங்களில் சமூக ஊடகங்களில் பரவி முக்கிய பேசுபொருளாக மாறியது.



**இஸ்லாமியர்கள் மீதான வகுப்புவாத வன்முறைக்கும் படுகொலைகளுக்கும் பெயர்போன குஜராத்தில், பிரதமர் நரேந்திர மோடி மைதானத்தில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரசிகர்கள் (பெரும்பாலும் சங்கி மனநிலை ரசிகர்கள்) திரண்டிருக்க இந்தியா பாகிஸ்தான் போட்டியை நடத்தி தனது வெறுப்பு பரப்புரைக்கு கச்சிதமாக கிரிகெட் போட்டியை பயன்படுத்தியது பாஜக. போட்டியைக் காண உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அவரது மகன் ஜெய் ஷாவும் வருகை தந்து வெறுப்பை புன்சிரிப்பால் விதைத்தனர்.**

குஜராத்தை எப்படி ஒரு மதவாத பரிசோதனைக் கூடமாக வெற்றிகரமாக ஆர்.எஸ்.எஸ், பாஜகவினர் மாற்றியுள்ளனர் என்பதற்கு இந்த ஒரு நிகழ்வே எடுத்துக்காட்டாகும். பாகிஸ்தான் அணியினர் மீதான இந்தத் திட்டமிட்ட சீண்டலானது, சர்வதேச அளவில் இந்தியாவிற்கு பெரும் அவப்பெயரை உருவாக்கியதுடன், இந்திய ரசிகர்களின் விளையாட்டுணர்வு மீது மோசமான கருத்தை உருவாக்கிவிட்டது.

**ஆர்.எஸ்.எஸ் மயமான இந்திய கிரிக்கெட் வாரியம்:**

இந்தியாவிலுள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் வாரிசு அரசியல் செய்கிற கட்சிகள் என்று விமர்சனம் செய்கிற உள்துறை அமைச்சர் அமித்ஷா, கிரிக்கெட் தொடர்பாக எந்தவித அறிவோ பின்புலமோ இல்லாத தன் மைந்தன் ஜெய்ஷாவை சக்திவாய்ந்த பதவியாக கருதப்படுகிற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் பதவியில் அமர்த்தி அழகு பார்த்தார். பாஜகவினர் எப்போதும் ஊருக்கு மட்டுமே உபதேசம் செய்கிற கொள்கையுடையவர்கள் என்பதற்கு இது ஒன்றே சாட்சி!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளராக அமித்ஷாவின் மகன் பொறுப்பேற்ற பின்னர் இந்திய கிரிக்கெட் விளையாட்டில் மதவாத அரசியல் தீவிரப்பட தொடங்கியது எனலாம்.

முன்னதாக, 2021 ஆம் ஆண்டில் நடந்து முடிந்த இருபது ஓவர் உலகத் தொடர் போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் இந்தியா தோல்வியடைந்தது. இதுவே உலகக்கோப்பை தொடரில் முதல் முறையாக பாகிஸ்தானிடம் இந்தியா தோற்ற போட்டியாகும். இந்தப் போட்டியில் பந்து வீசிய இந்திய பந்து வீச்சாளர் முகமது ஷமி மீது மத ரீதியான தாக்குதலை சரமாரியாக சங்கி கும்பல் மேற்கொண்டனர். இந்த செயலுக்கு கடுமையாக எதிர்வினையாற்றிய அப்போதைய கேப்டன் கோலி "ஒருவரை அவரின் மதத்தின் போரால் தாக்குவது என்னைப் பொறுத்தவரை மிக முட்டாள் தனமான செயல், தனிப்பட்ட முறையில் ஒருவரை மதத்தின் பெயரால் இழிவுபடுத்துவதை நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இப்படிப்பட்ட முதுகெலும்பற்ற நபர்கள் செய்யும் வேலைகள் எங்கள் அணிக்குள் இருக்கும் நட்புறவையும், சகோதரத்துவத்தையும் ஒருபோதும் அசைக்காது" என்று காட்டமாக விமர்சித்தார். மற்றவர்கள் போல ஓரிரு வரியில் சடங்காக வெறுப்புப் பேச்சை கண்டித்து நழுவாமல், முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று பத்திரிகையாளர் சந்திப்பில் கோலி பதிலடி கொடுத்தது, இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் பாஜகவினர் இடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்தப் போட்டியின் முடிவில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் ஆசம், ரிஸ்வான் ஆகியோரை கோலி கட்டியணைத்து கைகுலுக்கிய படமும் வைரலானது. பாகிஸ்தானுடன் முதல் தோல்வி, சக வீரரை மத ரீதியான தாக்குதலில் இருந்து தற்காத்தது, எதிர் அணியை எதிரி அணியாக கோலி நடத்தாதது போன்ற நிகழ்வுகள் இயல்பாகவே பாஜகவை எரிச்சலடைய செய்தன. இந்த நிகழ்விற்கு அடுத்த சில நாட்களில் ஒட்டுமொத்த கேப்டன் பொறுப்பிலிருந்தும் கோலி அதிரடியாக நீக்கப்பட்டார். பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்புதான் தகவல் தரப்பட்டதாக அவர் கூறியது குறிப்பிடத்தக்கது.

அதன் பிறகு, இந்திய அணியின் கேப்டனாக ரோஹித் ஷர்மா நியமிக்கப்பட்டார். அடுத்த சில ஆண்டுகளில் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த ஆசியக் கோப்பை போட்டியில், பாகிஸ்தானுக்கு சென்று விளையாட மாட்டோம் என பிசிசிஐ செயலாளர் ஜெய்ஷா மறுப்புத் தெரிவித்தார். பன்னாட்டு கிரிக்கெட் வாரியமும் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் பணபலத்தால் கட்டுப்படுத்தப்படுவதால், பன்னாட்டு கிரிக்கெட் வாரியமும் அமைதி காத்தது.

# டுணர்வை சிதைத்த ‘ஜெய் ஸ்ரீராம்’ க்கெட்டில் மதவெறி அரசியல்

பாகிஸ்தானுக்கு சென்று இந்தியா விளையாட மறுத்ததால், இந்தியாவில் நடைபெறும் உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்க வரமாட்டோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் முதலில் மறுத்தது. பின்னர், இந்தியா விளையாடும் போட்டி இலங்கைக்கு மாற்றப்பட்டு இந்தியாவும் பாகிஸ்தானும் இலங்கையில் மோதின. இதில் கொடுமை என்னவென்றால் பெரும்பாலான போட்டிகள் மழை குறுக்கிட்டதால் மிகவும் அவமானகரமான வகையில் நடைபெற்று முடிந்தது.

இந்த நிலையில்தான் இந்தியாவில் நடைபெறுகிற உலகக்கோப்பை தொடருக்கு பாதுகாப்பு காரணங்களால் வர முடியாது என முதலில் மறுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், பின்னர் இந்தியாவில் சென்னை யிலோ கொல்கத்தாவிலோ நடத்தினால் வருவோம் என்றது. ஆனால் பாகிஸ்தானின் கோரிக்கையை திமிராக நிராகரித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ), தனது மதவாத அரசியலில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை புகுத்த கச்சிதமாக திட்டம் வகுத்தது. மேலும் உணவுப் பட்டியலில் மாட்டிறைச்சி உணவு வழங்குவதை தடை செய்தது. பாகிஸ்தான் ரசிகர்களுக்கு இந்தியாவுக்கு வந்து போட்டியை பார்ப்பதற்கான விசாவையும் இந்தியா வழங்கவில்லை.

தங்களின் இந்துத்துவ பரிசோதனைக் கூடமான குஜராத் மாநிலத்திலேயே இந்தியா பாகிஸ்தான் போட்டியை நடத்த பிசிசிஐ முடிவெடுத்தது. முன்னதாக 2011 ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் அரை யிறுதியில் மோதின. இம்முறை பஞ் சாபில் ஆம்ஆத்மி கட்சியின் ஆட்சி நடப்பதாலும், காலிஸ்தான் பிரச்சனையை காரணம் காட்டியும் பஞ்சாபில் ஒரு போட்டி கூட பிசிசிஐ நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தகது.

இந்தியாவில் சினிமா நாயகர்களுக்கு அடுத்து, அதிக ரசிகர்கள் பட்டாளம் இருப்பது கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்குத்தான். அதுவும் அரசியல் ரீதியாக பகை நாடாக கற்பிதம் செய்யப்பட்டுள்ள பாகிஸ்தானுடன் இந்திய அணி விளையாடும் போட்டிகளில், விளையாட்டு உணர்வு பின்னுக்குத் தள்ளப்பட்டு நாட்டின் தேசிய உணர்வு சற்று அதிகமாக பீரிடச் செய்கிறது.

இந்த தேசிய உணர்வை, தேசிய வெறியாகவும், மத வெறியாகவும் மாற்றிட முயன்ற பாஜக கும்பல், கச்சிதமாக இந்தியா பாகிஸ்தான் போட்டியை அகமதாபாத்தில் நடத்தியது. அதற்காகவே இந்தப் போட்டியை அதிகம் முக்கியத்துவம் வாய்ந்த போட்டியாக செயற்கைப் பிம்பம் உருவாக்கப்பட்டது. இன்னும் ஒரு நாள் தான் இந்தியா பாகிஸ்தான் போட்டிக்கு என பரப்புரை செய்யப்பட்டது.

தற்போது நடைபெறும் கிரிக்கெட் போட்டித் தொடருக்கு பிரம்மாண்ட தொடக்க நிகழ்வுகள் ஏதும் நடத்தாத பிசிசிஐ, இந்தியா பாகிஸ்தான் போட்டிக்கு முன்னர் இசை நிகழ்சிகளை நடத்தி, போட்டித்தொடரின் இடையிலே இருநாடுகளுக்கு மட்டும் பிரத்யேகமாக நிகழ்ச்சி நடத்தியது.

இஸ்லாமியர்கள் மீதான வகுப்புவாத வன்முறைக்கும் படுகொலைகளுக்கும் பெயர்போன குஜராத்தில், பிரதமர் நரேந்திர மோடி மைதானத்தில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரசிகர்கள் (பெரும்பாலும் சங்கி மனநிலை ரசிகர்கள்) திரண்டிருக்க இந்தியா பாகிஸ்தான் போட்டியை நடத்தி தனது வெறுப்பு பரப்புரைக்கு கச்சிதமாக கிரிகெட் போட்டியை பயன்படுத்தியது பாஜக. போட்டியைக் காண உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அவரது மகன் ஜெய் ஷாவும் வருகை தந்து வெறுப்பை புன்சிரிப்பால் விதைத்தனர்.

ஒரு புறம் விளையாடுபவர்களுக்கு அதிகப்படியான உளவியல் நெருக்கடியை உருவாக்கியும் மறுபுறம் இந்தியா பாகிஸ்தான் போட்டிக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் வழங்கிய பாஜகவின் செயல், “ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்”டிற்கு அவமானத்தை ஏற்படுத்தியது.

இப்படியான சூழ்நிலையில்தான் அகமதாபாத் ரசிகர்கள் அநாகரிகமாக முழக்கமிட்டு ஆர்.எஸ்.எஸ், பாஜக எதிர்பார்த்த வெறுப்பு அரசியலை நிகழ்த்திக் காட்டினர். இந்த செயலுக்கு கிரிக்கெட் ரசிகர்கள் கடும் அதிருப்தியையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியது.

“இந்தியா அதன் விளையாட்டுத் தன்மைக்கும், விருந்தோம்பலுக்கும் பெயர்பெற்ற நாடு. இருப்பினும் நரேந்திரமோடி மைதானத்தில் பாகிஸ்தான் வீரருக்கு நேர்ந்தது ஏற்புடையது அல்ல. அது மிகவும் கீழ்த்தரமானது. விளையாட்டு என்பது தேசங்களுக்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்க வேண்டும். சகோதரத்துவத்தை வளர்ப்பதாக இருக்க வேண்டும். அதை வெறுப்பைப் பரப்பப் பயன்படுத்துவது கண்டனத்துக்குரியது” என தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

‘‘இந்தியாவில் நடந்து வரும் உலகக் கோப்பை 2023, ஐசிசி உலகக் கோப்பை போல் இல்லை. மாறாக பிசிசிஐ உலகக் கோப்பைப் போல் உள்ளது. மேலும் மைக்ரோபோனில் தில் தில் பாகிஸ்தான் சப்தம் கேட்கவே இல்லை’’ என்று பாகிஸ்தான் அணி இயக்குநர் மிக்கி ஆர்தர் சற்று காட்டமாகவே விமர்சித்துள்ளார்.

இந்நிலையில், குஜராத்தில் பாகிஸ்தான் அணியினருக்கு ஏற்படுத்திய அவமானத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து “மன்னித்துவிடு பாகிஸ்தான்” என்ற முழக்கம் முகநூலில் வைரலானது. குஜராத் ரசிகர்கள் செய்த இழிசெயலுக்கு தமிழ்நாட்டிலிருந்து ஏன் மன்னிப்பு வருகிறது? தமிழ்நாட்டில் இருந்து ஏன் அதிகளவில் கண்டனங்கள் வருகின்றன? இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருக்க, தமிழ்நாட்டில் மட்டும் விளையாடுவதற்கு பாகிஸ்தான் நிர்வாகம் ஏன் விருப்பம் தெரிவிக்கிறது? இதற்கான விடையை அறிந்துகொள்ள நாம் சற்று வரலாற்றில் பின்னோக்கிச் செல்ல வேண்டும்

### எதிர் அணி, எதிரி அணி அல்ல: இந்தியாவுக்கு கற்றுக்கொடுத்த தமிழ்நாடு

1999 ஆம் ஆண்டு தொடக்கத்தில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில், இந்தியா பாகிஸ்தான் டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இந்திய அணியினர் வெற்றியை நெருங்கிய நேரத்தில், இறுதிகட்டத்தில் பாகிஸ்தான் அணியின் சுழல்பந்து வீச்சாளர்களிடம் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து இந்தியா தோற்றுவிட்டது. இந்தப் போட்டி முடிந்த பின்னர், பாகிஸ்தான் அணி வீரர்களை பாராட்டும் விதமாக ரசிகர்கள் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பினர். ரசிகர்களின் பாராட்டை பெற்றுக் கொள்கிற விதமாக பாகிஸ்தான் அணியினர் மைதானம் முழுவதும் சுற்றி வந்து நன்றி தெரி வித்தனர். அப்போதும் கைதட்டுவதை நிறுத்தாத ரசிகர்கள் பெரும் ஆரவாரம் செய்து பாகிஸ்தான் வீரர்களை கைதட்டி உற்சாகப்படுத்தி திகைக்க வைத்தனர். அந்தப் போட்டியில் சொந்த நாடு தோற்றாலும், வென்ற அணியின் விளையாட்டுத் திறமையை அங்கீகரிக்கும் வகையாக, அந்த நாடு பகை நாடு என கற்பிக்கப்பட்டாலும் விளையாட்டுக்கு உரிய மரியாதையை செய்தது தமிழ்நாடு.





இந்த நிகழ்வானது அரசியல், இனம், மொழி, பண்பாடு, மதம் கடந்து “விளையாட்டுணர்வு” என்ற ஒற்றை இழையில் மனித மனங்கள் இணைய முடியும் என்பதை உலகிற்கே காட்டியது.

“சேப்பாக்கத்தில் ஒவ்வொரு போட்டி நடைபெறும் போதும், தமிழ்நாடு ரசிகர்கள் ஒரு நல்ல கிரிக்கெட்டுக்கு ஆதரவு அளிக்க மட்டுமே வருவார்கள். மாறாக தங்கள் அணி மட்டுமே சிறப்பாக செயல்பட வேண்டும், எதிரணியினர் செயல்படக் கூடாது என்று ஒருபோதும் நினைத்து வரமாட்டார்கள். இது ஒருமுறை கூட சென்னையில் நடந்தது கிடையாது. இது எனக்கு கிரிக்கெட்டை எப்படி புரிந்து கொள்ள வேண்டும், எப்படி மதிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுத்துள்ளது” என சென்னை ஐபிஎல் அணியின் கேப்டனும், முன்னால் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனுமான தோனி கூறியது பொருத்தமாக இருக்கிறது.

அரசியலும், மதமும், சமூக வலைதளங்களும் வெறுப்பை விதைக்கும்போது, விளையாட்டாவது நல்லிணக்கத்திற்கான இணைப்புப் பாலமாக இருக்க வேண்டும்’ என மூத்த பத்திரிகையாளர் சர்தேசாய் ராஜ்தீப் இந்நிகழ்வு மீதான ஆதரவுக் குரலுக்கு கச்சிதமாக பதிலளித்துள்ளார்.

தொடர்புக்கு: 9842391963

# வாரிய முடிவுப்படி கட்டிடத் தொழிலாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.2000த்தை அமல்படுத்துக

## கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு வலியுறுத்தல்

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி. கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு, மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கட்டட தொழிலாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் 2000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

“தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையில் மாநில தலைவர் கே.இரவி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏ. ஐ. டி. யூ. சி. யின் தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, அகில இந்திய முடிவுகள் பற்றியும், இன்றைய அரசியல் நிலவரங்கள் பற்றியும் விளக்க உரை ஆற்றினார். தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. யின் பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் வழி காட்டினார்.

சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என். செல்வராஜ் அறிக்கை தாக்கல் செய்தார் பேசினார்.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானம் ஒருமனதாக எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து 60 வயது நிறைவடைந்த தொழிலாளர்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மாத ஓய்வூதியம் ஆயிரம் என்பது மூத்த தொழிலாளர்களுக்கு மருந்துகள் கூட போதவில்லை என்பதால், 6 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று ஏ. ஐ. டி. யூ. சி. உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றன. இந்த




நிலையில் நலவாரிய கூட்டம் மாதம் மூன்றா யிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கலாம் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது.


அரசு ஒப்புதல் வழங்காமல் 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் என்பது வாரியத்தின் நிதிச் சுமையை அதிகரிக்கும் என்பதால் குறைத்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்புக என்று நிதித்துறை வழிகாட்டுதல் படி, தமிழ்நாடு அரசு தீர்மானத்தை வாரியத்திற்கு திருப்பி அனுப்பி விட்டது. மீண்டும் வாரிய முத்தரப்பு குழுவும் கூடி, 2000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு கடந்த மார்ச் 9ஆம் தேதி அனுப்பி வைத்தது.

ஆறு மாதம் கழித்து கடந்த அக்டோபர் ஆறாம் தேதி இருநூறு ரூபாய் மட்டும் உயர்த்தி 1200 ரூபாய் ஓய்வூதியம் வழங்கலாம் என்று அரசாணை வெளி யிடப்பட்டது. 1200 ரூபாய் ஓய்வூதியம் என்பது ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கம் ஒருமனதாக நிராகரிக்கிறது. எனவே, வாரிய முடிவின்படி 2,000 ரூபாய் உடனடியாக வழங்க வேண்டும்.

### லட்சத்திற்கும் மேல் அஞ்சல் அனுப்பும் போராட்டம்

புதுச்சேரி மாநிலத்தில் வழங்கப்படுவது போல் தமிழ்நாட்டில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் தீபாவளி பண்டிகை போனஸ் தொகையாக தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். என்பதை வலியுறுத்தி ஏ.ஐ.டி.யூ.சி.யின் 104 ஆவது அமைப்பு தினமான அக்டோபர் 31ம் தேதி காலை தமிழ்நாடு முழுமையிலும் உள்ள கட்டுமான தொழிலாளர்களின் கிளைகளிலிருந்து வசிப்பிடங்களில் இருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு ஒரு லட்சத்திற்கும் மேல் அஞ்சல் அட்டை கோரிக்கை அனுப்புதல் போராட்டம் நடத்துவது என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

# நடிகர் நாசர் தந்தை மகபூப் பாஷா மறைவுக்கு இரங்கல்



நடிகர் நாசர் தந்தை மகபூப்பாஷா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

திரைப்படக் கலைஞரும், திரைப்பட நடிகர் சங்கத்தின் தலைவருமான நாசரின் தந்தையார் மகபூப் பாஷா (95) 10.10.2023 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைந்தோம்.

நகை மெருகேற்றும் தொழில் செய்து வந்த மாபுப் பாஷா தனது மகன் நாசர் நல்ல திரைப்படக் கலைஞராக வர வேண்டும் என்பதற்கு அரும்பாடு பட்டுள்ளார். தந்தையின் உணர்வை புரிந்து முன்னேறிய நாசர் தந்தைக்கு புகழ் சேர்த்துள்ளார்.

வயது மூப்பின் காரணமாக மறைந்த மாபுப் பாஷா அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது மகன் நாசருக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சந்திரபாபு நாயுடுவை மருத்துவமனைக்கு மாற்றுக!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

ஊழல் குற்றசாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள சந்திரபாபு நாயுடுவை மருத்துவமனைக்கு மாற்றக் கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஆந்திர அரசு சந்திரபாபு நாயுடுவை ஊழல் குற்றசாட்டின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அவரது வயது மற்றும் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியை முன் வைக்காமல், மருத்துவமனைக்கு மாற்ற முயற்சிக்க வேண்டும். சந்திரபாபு நாயுடு ஒரு வாரமாக நீர்ச்சத்து குறைபாட்டால் தளர்ந்து இருப்பதாக செய்தி வருகிறது. அவர் மீதான குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. எனவே மாநில அரசும், நீதித்துறையும் அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து சந்திரபாபு நாயுடுவை மருத்துவமனைக்கு மாற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பயிர் உற்பத்தியை பெருக்க மண் பரிசோதனை கூடம் அமைக்க வி.ச. மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் திருச்சி மாவட்ட 24 வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு சுப்ரமணி தலைமை வகித்தார் மாநாட்டின் கொடியின் சந்திரசேகர் ஏற்றி வைத்தார்.

மாநாட்டினை தொடங்கி வைத்து சங்கம் மாநில துணை செயலாளர் இந்திரஜித் உரை நிகழ்த்தினார். வேலை அறிக்கை யினை மாவட்ட செயலாளர் சிவசூரியன் சமர்ப்பித்தார்.

மாநகர், புறநகர் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மாநகர் மாவட்டத்திற்கு ஐந்துபேர் கொண்டகுழு அமைக்கப்பட்டது. இக்குழுவிற்கு சிவசூரியன் கன்வினராக தேர்வு செய்யப்பட்டார்

புறநகர் மாவட்டத்திற்கு மாவட்ட தலைவராக ரமேஷ், மாவட்டத் துணைத் தலைவராக ராதாகிருஷ்ணன்,




மாவட்ட செயலாளராக பழனிச்சாமி, துணை செயலாளராக ராஜேந்திரனும், பொருளாளராக சுப்பிரமணியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டை வாழ்த்தி தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநிலத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன் சிறப்புரை நிகழ்த்தினார்

கிராமங்களில் பயிர் வாரியாக உற்பத்தியை பெருக்க மண் பரிசோதனை கூடங்கள் அமைத்திட வேண்டும், 60 வயது முதிர்ந்த விவசாயிகளுக்கு மாதம் 10,000 பென்ஷன் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டதை கிராம கணக்கில் ஏற்ற கோரி ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றிய, மந்தித்தோப்பு வருவாய் கிராமம் இந்திரா காலனியில் 279 நபர்களுக்கு பட்டா வழங்கி அதில் வீடு கட்டி சுமார் 25 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். ஆனால் இது நாள் வரையிலும் கிராமக் கணக்கில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.




எனவே குடியிருந்து வரும் நபர்கள் பெயரில் கிராமக் கணக்கில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவர்களு க்கு பட்டா வழங்க வேண்டுமென்று சிபிஐ தாலுகா செயலாளர் ஜி.பாபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தி கோரிக்கை மனு வட்டாட்சியரிடம் அளிக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் பி.கரும்பன், மாவட்ட நிர்வாகக் குழு ஜி.சேதுரமலிங்கம், நகரச் செயலாளர் ஏ.சரோஜா, சிபிஐ மாவட்டக்குழு பி.பரமராஜ், நகர துணைச் செயலாளர் ஜி.அலாவுதீன், நகரப் பொருளாளர் எம்.ராஜ், நகர துணைச் செயலாளர் டி.முனியசாமி, நகரக் குழு ஏ.ரஞ்சனி கண்ணம்மா, நகரக் குழு எஸ்.சண்முகவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

இஸ்ரேல் நாட்டின் ஹைஃபா துறைமுகத்தை தனியார்மயமாக்கும் திட்டத்தின் டெண்டரை 1.18 பில்லியன் டாலர் மதிப்பிலான ஏலத்தை வென்ற கடோட் குழுமம், அதானி போர்ட்ஸ் உடன் இணைந்தது. இந்த கூட்டணி டிசம்பர் 2022 இல் இஸ்ரேல் அரசிடம் இருந்து ஹைஃபா போர்ட் லிமிடெட் நிறுவனத்தைக் கையகப்படுத்தியது.



இதற்கு இஸ்ரேல் அரசிற்கு அதானி போர்ட்ஸ் சுமார் 785 மில்லியன் டாலர் முதலீடு செய்தது. மேலும் அதானி போர்ட்ஸ் நிறுவனம் நடப்பு நிதியாண்டில் ஹைஃபா துறைமுகத்தின் சரக்கு வணிக அளவை 10 முதல் 12 மில்லியன் டன்னாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பின்னணியில்தான் இஸ்ரேல் பாலஸ்தீனியப் பிரச்னையில் வழக்கத்திற்கு மாறாக இஸ்ரேலுக்கு ஆதரவாக பிரதமர் மோடி குரல் கொடுத்துள்ளார். சோழியன் குடுமி சும்மா ஆடாதில்லே!

# சங்கே முழங்கு!



## கள்ளக்குறிச்சி பகுதியில் தரமற்ற உணவகங்கள்



கள்ளக்குறிச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டும் பெரும்பாலான துறை அலுவலகங்கள் இன்னும் விழுப்புரம் மாவட்டத்திலேயே இருந்து வருகிறது. இதனால் கள்ளக்குறிச்சி மாவட்ட பொதுமக்களும், விவசாயிகளும் பல்வேறு தேவைகளுக்காக இன்னும் விழுப்புரம் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உதாரணத்திற்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் உணவு பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கும், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலகம் விழுப்புரத்தில் உள்ளது. இதில் மாவட்ட அளவில் உள்ள மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் விழுப்புரம் மாவட்டத்திற்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கும் சேர்த்து பணியாற்றுகிறார். இவருக்கு உதவியாக வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் பணியிடத்தில் 2 பேர் மட்டுமே உள்ளனர்.

ஹோட்டல், பேக்கரி, ஸ்வீட் ஸ்டால், கூல்ட்ரிங்ஸ், மளிகை கடை உள்ளிட்ட பலவகையான உணவு மற்றும் உணவு பொருட்கள் தயார் செய்து விற்கும் வணிகர்களுக்கு உரிமம் தருவதும், புதுப்பிப்பதும், உணவு தரத்தை பரிசோதிப்பதும், பாதுகாப்பான முறையில் சுகாதாரத்துடன் தயாரிப்பதை கண்காணித்து உறுதி செய்வது, தரமற்ற, காலாவதியான உணவுப் பொருட்களை பறிமுதல் செய்து அபராதம் விதிப்பது போன்ற மனித உயிர் காக்கும் முக்கிய பணியினை மேற்கொள்ளும் அலுவலர்கள் போதிய அளவில் இல்லை.

இதனால் கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், தியாகதுருகம், சின்ன சேலம் போன்ற நகரங்களில் அசைவம் மற்றும் சைவ ஹோட்டல்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரி, பள்ளி விடுதிகள், ஆஸ்பத்திரிகள், திருமண மண்டபங்கள் போன்ற இடங்களில் தயாரிக்கப்படும் உணவு பற்றி முழுமையாக ஆய்வு, பரிசோதனையில் ஈடுபட முடியவில்லை இதனால் வணிக உரிமையாளர்கள் சுகாதாரமற்ற முறையில் தரம் இல்லாத உணவுகள் தயார் செய்து வருமானத்தை குறிக்கோளாக கொண்டு விற்பனை செய்கின்றனர்.

நுகர்வோர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் உயிர் பாதுகாப்பு பற்றி கவலை கொள்வதில்லை இந்த நிலையில் தரமற்ற உணவுப் பொருட்களை உட்கொள்ளுவதால் மனிதர்களுக்கு வாந்தி பேதி மற்றும் அஜீரணக் கோளாறு போன்ற உடல் உபாதைகளால் நோய்வாய்ப்பட்டு பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனாலேயே கள்ளக்குறிச்சி நகரப் பகுதியில் அதிக அளவில் மருத்துவமனைகள் பெருகிவிட்டது. என்பதை அரசும், மாவட்ட நிர்வாகமும் கருத்தில் கொண்டு கண்துடைப்புக்காக பெயரளவில் ஆய்வு செய்வதை தவிர்த்து பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க போதிய அதிகாரிகளை நியமித்து கண்காணிக்கவும், மனித வளத்தை பேணிக் காத்திடவும், சுகாதாரமான முறையிலும், தரமான உணவு வகைகளை உணவு பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி உணவுப் பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு வணிகர்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

– கபில்தேவ்,
ஜனசக்தி செய்தியாளர்

# காவிரிநீர் உரிமை தனித் தீர்மானத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

**சட்டமன்றத்தில் கே. மாரிமுத்து பேச்சு**





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் முன்மொழிந்திருக்கிற காவிரி நதிநீர் உரிமை பற்றிய தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

கர்நாடகத்தில் இருக்கிற அடிமடையில் இருந்து தமிழ்நாட்டில் இருக்கிற கடைமடை வரை காவிரிக்கான உறவு என்பது வழிவழியான உறவு என்பதனை நம்முடைய தமிழ்நாடு அரசு உணர்ந்து நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், இரு மாநிலங்களுக்கும் ஒரு நல்லுறவு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் எடுத்திருக்கிற முயற்சியை கர்நாடக அரசு மதிக்க வேண்டும். அதற்கு ஆதரவு தெரிவிக்காமல், அதேபோன்று, நம்முடைய தேசிய நீர்வளக் கொள்கை கோட்பாடுகளெயெல்லாம் மதிக்காமல், இயற்கை நியதிகளுக்கு முரண்பட்டு, தன்னார்வத்தோடு, தன்னுடைய சுயநலத்தோடு கர்நாடக அரசு நடந்து கொண்டிருக்கிறது.

காவேரி பகுதி குறிப்பாக, டெல்டா பகுதி இன்றைக்கு கருகிப்போய்க் கிடக்கிறது. குளிரூட்டப்பட்ட அறையில் நின்று நாம் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், காவிரியினுடைய கடைமடை பகுதி கடைசியாக உயிர்போகிற மனிதன் தண்ணீருக்காகத் தவிப்பதைப்போல, 10 மாதம் சுமந்த தாய் தன்னுடைய கருவறையில் பிரசவிக்கிறபோது ஏற்படுகிற நெருக்கடியில், வலியில் தவிக்கிறபோது எப்படி வலியால் தவிப்பாளோ, அதுபோல தவிக்கிறார்கள்.

குறுவைப் பயிர் கதிர் வருகிற நேரத்தில் விக்கிப்போய் நின்று கொண்டிருக்கிறது. எனவேதான், 56 அங்குலம் மார்பளவு கொண்டிருக்கிற ஒன்றிய அரசு தண்ணீரைப் பெற்றுத் தந்து, அந்தக் கடைமடைப் பகுதியைப் பாதுகாக்க வேண்டுமென்று முயற்சி எடுக்காத, இதயமில்லாத ஒன்றிய அரசு இருக்கிறது.

அதேபோல, கொடுக்க மறுக்கிற அடாவடித்தளம் செய்கிறது கர்நாடக அரசு. கருணை உள்ளத்தோடு நான் இருக்கிறேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகையை வழங்கியிருக்கிறார்கள் என்பதனை இங்கே நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இங்கே சொல்லக் கடமைப்படுவதெல்லாம் கடைமடைப் பகுதியில் இருக்கிற அந்த விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், அவர்களுடைய தொழிலும் இன்றைக்கு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய பேரியக்க கூட்டமைப்பின் சார்பில் வருகிற 11 ஆம் தேதியில் மிகப்பெரிய அளவில் காவேரி டெல்டா பகுதி முழுவதும் அங்கே முழு அடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி உள்ளிட்ட தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாப்பதற்கு இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மீண்டும் ஒருமுறை ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

# மின்கட்டண உயர்வைத் திரும்பப்பெற வலியுறுத்தி சிறு குறு தொழில்முனைவோர் உண்ணாவிரதம்





தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பு சார்பாக 16102023 அன்று சென்னை இராஜரத்தினம் திடலில், உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. உயர்த்தப்பட்ட நிலைக் கட்டணம், சோலார் பேனல் மின் உற்பத்திக்கு கட்டண வசூல், பீக்ஹவர் கட்டண வசூல் ஆகியவற்றை தமிழ்நாடு அரசு உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்தினர்.

“தமிழ்நாட்டில் அரசுத்துறையை விட அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் சிறு, குறு தொழில் நிறுவனங்கள், 480 விழுக்காடு மின்கட்டண உயர்வால் சிறு குறு தொழில் நிறுவனங்களே நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. மின்கட்டண உயர்வு குறித்த கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருமே மின்கட்டண உயர்வுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் மின்கட்டணத்தை உயர்த்தியது எப்படி?” என்று தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜேம்ஸ் கூறினார். மின்கட்டண உயர்வை திரும்பப்பெற வலியுறுத்தி தொடர் போராட்டங்களை அறிவித்த மின்நுகர்வோர் கூட்டமைப்பு, டிசம்பர் 18 ஆம் தேதி முதல் காலவரையற்ற உற்பத்தி நிறுத்தம் நடைபெறும் என்று அறிவித்தனர். இந்தப் போராட்டத்தில், சட்டப்பேரவை உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் மற்றும் சிறு குறு தொழில்முனைவோர்கள் ஏராளமானோர் தமிழகம் முழுவதிலும் இருந்து கலந்துகொண்டனர்.

# த.க.இ.பெருமன்ற முப்பெரும் நிகழ்வுகள்



தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் ஈரோடு வடக்கு மாவட்டம் சார்பில் “முப்பெரும் நிகழ்வுகள்” சத்தியமங்கலம் ஜீவா அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கராஜ் தலைமை தாங்கினார். ஸ்டாலின் சிவகுமார் வரவேற்புரை நல்கினார்.

முதல் நிகழ்வாக ஜீவா அரங்கினுள் அமையவிருக்கும் என்.சி.பி.எச். புத்தக அங்காடியை விதைகள் வாசகர் வட்டத்தைச் சேர்ந்த யாழினி ஆறுமுகம் திறந்து வைத்து, விற்பனையை துவக்கி வைத்தார்.

அடுத்து நடைபெற்ற “குருதட்சணை” நாவல் வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் வெளியிட, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் பெற்றுக் கொண்டார். நூலினை தா.சந்திரன் அறிமுகப்படுத்தி, விமர்சன உரையாற்றினார். த.அறம், பி.எல்.சுந்தரம் சிறப்புரை நிகழ்த்தினர். ஜீவா ஏற்புரை வழங்கினார்.

மூன்றாவது நிகழ்வாக ஸ்ரீ வர்ஷா இயக்கிய ஆவணப்படம் “ஜீவ நதியின் தீரா வலி” வெளியிடப்பட்டது. இந்த ஆவணப்படம் குறித்து மருத்துவர் பிரேமா கருத்துரை வழங்கினார். ஸ்ரீ வர்ஷா ஏற்புரை வழங்கினார். ஆர்.குணசேகரன் நன்றியுரை வழங்கினார். ஏராளமான கலை இலக்கிய ஆர்வலர்களும், பொதுமக்களும் கலந்து கொண்ட அரங்கம் நிறைந்த நிகழ்வாக நடைபெற்றது.

## தொண்டர்படை பயிற்சி முகாம்

**தென்காசி மாவட்டம் - அழகப்பபுரம்:** மக்கள் தொண்டர் படை முகாம் தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியத்துக்கு உட்பட்ட அழகப்பபுரத்தில் நடைபெற்றது.

தமிழகத்தைச் சேர்ந்த 11 மாவட்டங்களிலிருந்து 35க்கும் மேற்பட்ட இளம் தோழர்கள் உற்சாகத்துடனும் கலந்து கொண்டனர். சந்திரசேகர் ஆசாத் பயிற்சியை சிறப்பாக நடத்தி கொடுத்தார்.

பயிற்சியின்போது இந்திய கம்யூனிசிஸ்ட்கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எம் . லகுமையா, ஏஐஒய்எஃப் மாநில செயலாளர் க. பாரதி, மாநில ஏ. ஐ. டி. யு. சி. தலைவர் எஸ். காசி விஸ்வநாதன்பார்வையிட்டனர். தென்காசி மாவட்ட செயலாளர் த. இசக்கித்துரை முன்னின்று நடத்தினார்.

**அன்னவாசல்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் தொண்டர் அணி பயிற்சி அன்னவாசலில் நடைபெற்றது. மாவட்ட பயிற்சியாளர் எம். விஜய் பயிற்சயளித்தார். நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் எம். முகமது ரிசா தலைமையேற்றார். விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ. ரங்கராஜ், சிபிஐ ஒன்றிய செயலாளர் ஏ. நாகராஜ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம். மீரா மைதீன் முன்னிலை வகித்தனர்.

### கரடி தாக்கிய மலைவாழ் பெண்ணுக்கு
## நிவாரண தொகையை பெற்று தந்தது கம்யூனிஸ்ட் கட்சி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிக்கு வேலைப்பர் கோவில் மலைவாழ் பழங்குடி மக்கள் சார்பாக மனபூர்வமான நன்றி யினை தெரிவித்த போது

தேனிமாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் தெப்பம்பட்டி கிராமம் வேலைப்பர் கோவிலில் இருக்கும் கதிர்வேல் புரம் மலைவாழ் பழங்குடி இனத்தை சேர்ந்த செல்வி என்ற பெண், கடந்த சில மாதங்களுக்கு முன்பு வன பொருட்கள் சேகரிக்க சென்ற போது, கரடி தாக்கியதால் கொடும் காயம் ஏற்பட்டு தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியியால், தேனி மாவட்ட வனத்துறையின் மூலம் ரூ.30000 உதவி தொகை பெற்று தந்தனர். அதற்கு பழங்குடி மக்கள் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மலைவாழ் பழங்குடி மக்கள் மனபூர்வமான நன்றியினை தெரிவித்தனர்.

## வெடி விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஏ.ஐ.டி.யு.சி. ஆறுதல்

அரியலூர் தாலுகா வெ.விரகாலூர் கிராமத்தில் வயல்வெளி பகுதியில் தனியாருக்கு சொந்தமாக இயங்கி வந்த பட்டாசு தயாரிக்கும் ஆலையில் சென்ற அக்டோபர் 9 அன்று ஏற்பட்ட பயங்கரமான தொடர் வெடி விபத்தில் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களில் 12 பேர் கோரமாக பலியாயினர். பலர் படுகாயத்துடன் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தோர்களில் 7 பேர் அரியலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர். இவர்களை ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி மாவட்டக் குழு உறுப்பினர் திருமானூர் ஜி.ஆறுமுகம், திருமானூர் ஒன்றிய செயலாளர் மு. கனகராஜ், ஒன்றிய பொருளாளர் டி.ஜீவா, அரியலூர் ஒன்றிய செயலாளர் டி.ராயதுரை ஆகியோர் சென்று பார்த்து நலம் விசாரித்து, சிகிச்சை முறைகளை கேட்டறிந்தனர்.

### வினாடி - வினா விடைகள்

1. ஆக்சிஜன்
2. தோராயமாக 8 நிமிடம் 20 நொடிகள்
3. சுமார் 2,99,792 கிலோமீட்டர்
4. 15 லட்சம் ஆண்டுகள்
5. ராபர்ட் கால்டுவெல்
6. 6000 மைல்கள்

## தருமபுரி மாவட்ட பள்ளி கல்வித்துறை தூய்மை பணியாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்




தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் அரசு தொடக்கபள்ளி, அரசு நடுநிலைப்பள்ளி, அரசு உயர்நிலைப்பள்ளி, அரசு மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளில் கழிப்பிட தூய்மை பணி செய்யும் பணியாளர்களுக்கு மாதாமாதம் சம்பளம் வழங்க கோரி தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்க மாவட்ட செயலாளர் செல்வி தலைமைதாங்கினார் சங்க மாவட்ட துணைத்தலவர்கள் அ. ஆஞ்சலா, மீனாட்சி, மாதம்மாள், மாவட்ட துணைச்செயலாளர்கள் கே ரவிச்சந்திரன், சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர், கோரிக்கைகளை விளக்கி ஏஐடியுசிதருமபுரிமாவட்ட பொதுச்செயலாளர் கே. மணி, தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர் ஜெ. பிரதாபன், ஏஐடியுசி மாவட்ட துணைச் செயலாளர் ஆர். நடராஜன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என் மனோகரன் ஆகியோர் பேசினார்கள். இறுதியில் சங்க மாவட்ட பொருளாளர் வி. ஜெயந்தி நன்றி கூறினார்.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உடுமலைப்பேட்டை தாலூகா மாநாடு




திருப்பூர் புறநகர் மாவட்டம் உடுமலைப்பேட்டை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் 26 வது தாலூகா கமிட்டி மாநாடு உடுமலைப்பேட்டை நகரில் நடைபெற்றது. மாநாட்டுக்கொடியினை மூத்த தோழர்.க.கந்தசாமி ஏற்றிவைத்தார்.

மாநாட்டு தலைமைக் குழு சி.சுப்பிரமணியம், மு.நந்தகோபால், கே.சித்ரா ஆகியோர் மாநாட்டை வழி நடத்தினார்கள். மாநாட்டில் புறநகர் மாவட்ட செயலாளர் கே.எம்.இசாக் துவக்க உரையாற்றினார். தாலூகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன் வேலையறிக்கையை முன்வைத்து பேசினார். மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே.சுப்பராயன் நிறைவுரை ஆற்றினார்.

புதிய செயலாளராக வி.சௌந்தரராஜன், துணை செயலாளராக என்.கிருஷ்ணசாமி, பொருளாளராக கே.எஸ். ரணதேவ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் உடுமலைப்பேட்டை. மடத்துக்குளம் தாலூகா மக்களின் கோரிக்கை உள்ளடக்கி 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தியாகி சங்கரலிங்கனார் நினைவேந்தல் நிகழ்வு

குமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தியாகி க.பெ.சங்கரலிங்கநாடார் அவர்களின் நினைவேந்தல் கூட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் உள்ள ஜீவா சிலை முன் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார்.பூதை கிளைச்செயலாளர் த.மகேஷ், மாநகரப் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, தோவாளை தாலுகா செயலாளர்எஸ். கல்யாணசுந்தரம், கல்குளம் தாலுகா செயலாளர் எஸ்.ராஜு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் வி.அருணாசலம், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் எஸ்.கே.கங்கா, அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங் ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள். முடிவில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநகர பொருளாளர் கே.நாகராஜன் நன்றி கூறினார்.

## குடிநீர் தொட்டியில் எலும்புகள் பொதுமக்கள் சாலை மறியல்



கோவை பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த எஸ்.எஸ்.குளம் ஒன்றியம் காளிபாளையம் கிராமத்தில்ல குடிநீர் தொட்டி சுத்தம் செய்யப்பட்ட போது எலும்புகள் கிடந்துள்ளது. இந்த செய்தி ஊருக்குள் பரவியதை அடுத்து, பொதுமக்கள் பதட்டமடைந்தனர். இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை செயலாளர் பி. மகேந்திரன் தலைமையில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதை அடுத்து அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர்.

## ஏஐடியுசி மீனவச் சங்க நிர்வாகிகளை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தவர்கள் மீது நடவடிக்கை

### ஆட்சியரிடம் கோரிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம் கிராமத்தில் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மீதான தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தி ஏஐடியூசி மீனவர் சங்கம் சார்பில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் மனு அளிக்கப்பட்டது. இதில் மீனவர் சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.முருகானந்தம், மாநில பொதுச் செயலாளர் பி.சின்னத்தம்பி ஆகியோர் பங்கேற்றனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம் காந்தி நகர் மீனவ கிராமத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த பகுதி மீனவர்கள் பிடித்து வந்த மீன்களை பஞ்சாயத்தார்கள் ஏலக்குத்தகை என்ற பெயரில் ஏலம் விட்டு பல லட்சம் ரூபாய் வசூல் செய்கின்றனர். வசூல் செய்யும் பணத்திற்கு வரவு செலவுகள் முறையாக வைக்கப்படுவதில்லை, தவறாக பயன்படுத்துகிறார்கள். இதை தட்டி கேட்ட ஏஐடியூசி மீனவர் சங்க நிர்வாகிகள் எஸ்.சேகர், எஸ் .முத்துராமு, என் .காளிதாஸ், பாலுசாமி மனைவி சத்யா உள்ளிட்டோரை பழி வாங்கும் நோக்கத்துடன் அவர்கள் மீது குற்றம் சுமத்தி ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மீதான தடையை நீக்க வேண்டும் இப்பகுதியில் அமைதியை நிலை நாட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தை உடனே நடத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் பாலஸ்தீன போரை தடுத்து நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்








**வடசென்னை:** பாலஸ்தீனஇஸ்ரேல் மோதலின் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். விலைமதிப்பற்ற உயிரிழப்புகளைத் தவிர்க்க இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தி கொருக்குபேட்டையில் ஏஐஒய்எஃப், இஸ்கஃப், ஏஐஎஸ்எஃப், என்எஃப்ஐடபிள்யு, தஒவாஇ, ஐப்சோ சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஒவாஇ மாவட்டச் செயலாளர் ஜீ.சுப்ரமணி வரவேற்புரையாற்றினார். ஏஐஎஸ்எஃப் மாவட்டச் செயலாளர் இரா.இராமசாமி தலைமை தாங்கினார்.

மூ.ஜெய்சங்கர், கோட்டி சுரேஷ் ஏஐஒய்எஃப், மோ.ரேணுகா எம்.சி. என்எஃப்ஐடபிள்யு, நா.வசந்தபாரதி ஏஐஎஸ்எஃப், மல்லிஸ்வரி ஐப்சோ, இராஜவேல் இஸ்கஃப், இராமலிங்கம் தஒவாஇ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

என்எஃப்ஐடபிள்யு மாநில தலைவர் ஜி.மஞ்சுளா, தஒவாஇ மாநில செயலாளர் கி.சு.குமார், ஏஐஒய்எஃப் மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி ஆகியோர் கண்டனவுரையாற்றினார்.

ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர் ஆ.சுரேஷ் நன்றி கூறினார்.

வியாசர்பாடியில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கமும், ஏஐடியுசி, உழைக்கும் பெண்கள் அமைப்பு ஆகியவை இணைந்து தஒவாஇ வடசென்னை மாவட்டத் தலைவர் ஆர்.எம். சந்தோஷ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் சிபிஐ தேசிய குழு உறுப்பினர் வகிதா நிஜாம், மாநிலக் குழு உறுப்பினர் லி. உதயகுமார், வடசென்னை மாவட்டக் குழு உறுப்பினர் வி. வசந்த குமார், வடசென்னை மாவட்ட குழு உறுப்பினர் ஆ. சுப்ரமணி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஏ.அருள், தஒவாஇ மாவட்ட்ப் பொருளாளர் எஸ்.பாஸ்கர், திரு.வி.க நகர் பகுதி செயலாளர் பெருமாள் சாமி மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கிளை தோழர்கள் பங்கேற்றனர்.

**கோவை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம், இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து கோவையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் பொதுச் செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி, இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாவட்ட செயலாளர் சையது இப்ராஹிம், முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம்.செல்வராஜ், பி.மௌனசாமி, மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மு.வ.கல்யாணசுந்தரம், வி.ஆர். பாண்டியன், கே.ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், மோகன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** இடதுசாரிகள் பொது மேடை சார்பில் தஞ்சாவூர் ரெயிலடி முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் அதிகாரம் காளியப்பன் தலைமை வகித்தார். காங்கிரஸ் கட்சியின் பி.ஜி.இராஜேந்திரன் நிறைவு செய்து பேசினார். இதில் அயனாவரம் சி.முருகேசன், துரை.மதிவாணன், ராவணன், எஸ்.எம்.ஜைனுல் ஆபிதீன், மதிமுக வி.தமிழ்ச்செல்வன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆர்.மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஒன்றிய அரசை கண்டித்து டெல்டா மாவட்டங்களில் மறியல் மற்றும் கடையடைப்பு போராட்டம்



திருத்துறைப்பூண்டியில் ஒன்றிய அரசை கண்டித்து காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் புதிய பேருந்து நிலையம் எதிரில் சாலைமறியல் போராட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,திராவிட முன்னேற்ற கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மதிமுக மற்றும் கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் விவசாய சங்க தலைவர்கள், விவசாயிகள் ஏராளமானோர் மறியலில் பங்கேற்றனர். நாகை சாலையில் உள்ள தலைமை தபால் அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவருமான கோ. பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், ஐ.வி.நாகராஜன் மாநிலக்குழு சிபிஎம்,ஆர்.எஸ்.பாண்டியன் (திமுக) சி.ஜோதிபாசு(சிபிஎம்), பி.வி.சந்திரராமன்,கே. ஆர்.ஜோசப், கே.ராஜா,பி. பிரகாஷ் (திமுக), வி. ஜவஹர், டி.பி.சுந்தர், கோவி.சேகர் (மதிமுக) மற்றும் பல்வேறு தலைவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சங்கம், அரசு கலை கல்லூரி மாணவ, மாணவியர்கள் அனைவரும் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக நீதிமன்ற புறக்கணிப்பும், வகுப்பறை புறக்கணிப்பும் செய்தனர்.

# தொ.மு.சி. ரகுநாதன் நூற்றாண்டு விழா

ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி, தமிழ்த் துறை மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய தொமுசி ரகுநாதன் நூற்றாண்டு விழா கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

பேராசிரியர் மைதிலி ராஜ் வரவேற்புரை நல்கினார். முதல்வர் முனைவர் வெங்கடேஸ்வரன் தலைமை உரை ஆற்றினார். மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். "இளங்கோவடிகள் யார்?" என்ற தலைப்பில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் அறம் உரை நிகழ்த்தினார்.

முனைவர் கருப்புத்தேவன் " தொமுசி ரகுநாதனின் திறனாய்வு நெறி" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். முனைவர் ரவிசங்கர் " தொமுசி பார்வையில் பாரதி " என்ற தலைப்பில் பாரதி ஆய்வுகள் குறித்து உரை நிகழ்த்தினார். முனைவர் கீதா நன்றியுரை வழங்கினார். நிகழ்வில் ஏராளமான தமிழ்த் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## மருத்துவர் சுகிர்தாவின் மரணத்திற்கு நீதி கேட்டு
# மாணவர்கள் மனிதச் சங்கிலி




தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் மற்றும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் இணைந்து தற்கொலை செய்து கொண்ட மருத்துவர் சுகிர்தாவின் மரணத்திற்கு நீதிகேட்டு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் பயிற்சி மருத்துவர்கள் குமாரசாமி,கீர்த்தனா, மதுமிதா ஆகியோர் தலைமையில் கோரிக்கை அட்டை ஏந்தி மனித சங்கிலி போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் பாலியல் வன்முறை, கூடுதல் வேலை நேரம்,கடும் உழைப்புச் சுரண்டல்,ராகிங் உள்ளிட்ட காரணங்களால் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட டாக்டர் சுகிர்தாவிற்கு நீதி கேட்டும், குற்றவாளிகள் மீது சட்டரீதியான கடும் நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தியும் மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கோரிக்கை அட்டவணைகள் ஏந்தி மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்
# மாதம் ரூ.6000 வழங்குக!

### ராமநாதபுர மாவட்ட சங்கம் கோரிக்கை

ராமநாதபுரத்தில் ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் சங்கத் தலைவர் ஜி. லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் என். செல்வராஜ் சிறப்புரை ஆற்றினார்.

மாநில பொருளாளர் முருகன், சிபிஐ மாவட்டச் செயலாளர் என். எஸ். பெருமாள், ஏ ஐ டி யூ சி மாவட்ட பொதுச் செயலாளர் என். கே. ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகள், சங்க வளர்ச்சி குறித்துப் பேசினர்.

கட்டிடத் தொழிற் சங்க மாவட்டச் செயலாளர் ஆர். தர்மராஜன் அறிக்கை முன்வைத்துப் பேசினார் .

60 வயது நிரம்பிய ஆண் 55 வயது நிரம்பிய பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 6 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

அரசு அறிவித்துள்ள உதவித்தொகைகள் காலதாமதம் இன்றி வழங்க வேண்டும், மகளிர் உரிமைத்தொகை கிடைக்காத தகுதி உள்ள அனைவருக்கும் வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட துணைச் செயலாளர் வி. முருகானந்தம் நன்றி கூறி முடித்து வைத்தார்.

# வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை சீர்கேட்டைக் கண்டித்து சிபிஐ தர்ணா

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் அரசு வட்ட மருத்துவமனை உள்ளது. இதில் போதிய மருத்துவர்கள் இல்லை. நோயாளிகளுக்கு மருந்து மாத்திரைகள் தட்டுப்பாடகவே உள்ளது . பலமுறை மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. உடனே நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தர்ணா போராட்டம் நடைபெற்றது.

வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். பேரூராட்சி தலைவர் தவமணிமுருகேசன் முன்னிலை வகிததார். தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம். எல். ஏ., மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி., மாவட்ட நிர்வாககுழு உறுபபினர் வி. அழகிரிசாமி எக்ஸ் எம்.பி., பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ ஆகியோர் பேசினார்கள். தர்ணாவில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

### 135. அளவறிதல்

**அறிவினில் எல்லாம் அறிவாம் அளவறிதல்**
**அ:தல்ல தில்லை அறிவு.**

அளவறிதல் என்பது, எல்லாத்துறைகளிலும் நம் செயல்பாடுகளின், சிந்தனையின் அளவைப் புரிந்து கொள்ளுதலாகும். இல்லை எனில் எதுவும் அறிவாகாது.

**வறிஞ னெனப்படுவன் யாரெனின் யாதும்**
**அறியா னளவு மவன்.**

ஏழை என்பான் யாரெனின், அறியாமையில் இருப்பவனேபாவான் அதன் அளவும் தெரியாதவனாவான்.

# நூல் நயம்

## உழைக்கும் வர்க்கத்தின் உத்தமத் தலைவர்கள்




தமிழ்நாடு தொழிலாளர் வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர்களான கே.டி.கே. தங்கமணி, ஏ. எம். கோபு, எஸ். எஸ். தியாகராஜன், டி. ஆர். எஸ். மணி ஆகியோரின் நினைவுகள் குறித்து பல்வேறு ஆளுமைகளின் கருத்துக்களை, இரா. துரைசாமி சுவை பட தொகுத்துள்ளார். இது இளைய தலைமுறை அறியவேண்டிய தகவல்கள் அடங்கிய புத்தகமாகும்.

செல்வ செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த கே.டி.கே. தங்கமணி. ஒரு அப்பழுக்கற்ற எளிய வாழ்க்கை வாழ்ந்த தலைவர் ஆவார். நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து தொழிலாளர்கள் பல்வேறு சட்ட உரிமைகளை பெறுவதற்கு காரணமாக இருந்தவர். தொழிலாளர் வர்க்கம் இன்று பெற்று இருக்கிற பல்வேறு உரிமைகளுக்கு அடித்தளம் இட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று இந்திய விடுதலைப் போராட்டத்தால் வீறுகொண்டு, அதன் பின்னர் நடந்த வர்க்க போராட்டத்தில் சமரசம் இல்லாது போராடி பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளான தலைவர் ஏ. எம். கோபு. காவல்துறையின் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளான போதும், அஞ்சாது களத்தில் நின்ற தலைவர் அவர்.

அரசு அதிகாரி என்கிற உயர் பதவியை துச்சம் என தூக்கி எறிந்து, எளிய பாட்டாளி மக்களின் உயர்வுக்காக நாளும் பொழுதும் பாடுபட்ட தலைவர் எஸ். எஸ். தியாகராஜன். அவர் எண்ணம் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தின் உயர்வுக்கான சிந்தனையே அப்பி கிடந்ததால், ‘தொழிலாளி வர்க்கத்தின் என்சைக்ளோ பீடியா’ என வர்ணிக்கப்பட்டார் என்றால் அது மிகையல்ல.

இவர்களைப் போன்றே தொழிலாளர்களுக்காக நாளும் உழைத்த ஒரு மகத்தான மனிதர் தான் டி. ஆர். எஸ். மணி. எளிய வாழ்க்கை, தொழிலாளர்களோடு எளிதில் கலந்து விடும் பண்பு. தொழிற்சங்கத்தில் அனுபவம் மிக்க அறிவு . இப்படிப்பட்ட மகத்தான தலைவர்களின் கூட்டு உழைப்பால் தான் ஏ.ஐ.டி.யூ.சி மட்டுமல்ல, தமிழ்நாடு தொழிற்சங்க வரலாறு மகத்தான பல சரித்திர சாதனைகளை சாதித்துள்ளது என்பதை நாம் அறிவதற்கு இந்த நூல் ஒரு சான்றாகும். எனவே இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்

**– இன்சுவை பாரதி**

| | | |
|---|---|---|
| **நூலாசிரியர்** | : | **அம்பத்தூர் இரா. துரைசாமி** |
| **பக்கம்** | : | **150 விலை: 145** |
| **வெளியீடு** | : | **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50** |

## வையை ஆண்டு மலர் 2023




இயற்கை விவசாயத்தின் தேவைகளையும், பசுமை புரட்சிக்கு பின்பான காலகட்டங்களில் நம்முடைய விவசாயம் எவ்வாறு நஞ்சாகி உள்ளது என்பதையும், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிற வகையில், பாண்டிய மண்டல வேளாண் பேரமைப்பு. இயற்கை விவசா யிகளின் ஆண்டு மலர், வையை ஆண்டு மலர் 2023 என்கிற இந்நூலை பல்வேறு தரவுகளோடு வெளியிட்டுள்ளது.

பசுமைப் புரட்சிக்குப் பின்னான காலகட்டங்களில் நமது உணவு முறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, அரிசியை மட்டுமே நாம் முதன்மை உணவாகக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக சிறு தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு, சாமை, தினை, குதிரைவாலி, காடைக்கண்ணி போன்ற நாம் பயன்படுத்திய சிறுதானிய உணவை தவிர்த்து விட்டோம். ஒரு கிலோ நெல் விளைவிக்க தேவைப்படும் நீர் 1550 லிட்டர், அதேபோல் ஒரு கிலோ கோதுமை விளைவிக்க 750 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. ஆனால் சிறுதானியங்கள் விளைவிப்பதற்கு இதில் பத்தில் ஒரு பங்கு நீர் கூட தேவையில்லை. மிகக் குறைந்த மழையில் கூட வளர்ந்து விளைச்சல் தருபவை. அப்படி இருக்க இவற்றை மீண்டும் நாம் ஏன் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கூடாது என்கிற கேள்வி நியாயமான கேள்வியாகும். தமிழகத்தின் நதிநீர் சிக்கல் பெரும் சிக்கலாக மாறி உள்ள சூழலில், மாற்றுப் பயிர் குறித்து சிந்திப்பது நல்லது தானே? நாகரீகம் என்கிற பெயரில் நாம் நமது பழைய உணவுகளை ஏன் புறக்கணிக்க வேண்டும்.

நாம் நெல் உற்பத்திக்காக அளவுக்கு அதிகமாக பயன்படுத்தும் ரசாயன உரங்களால், நிலத்தின் தன்மை சீர் கெட்டு, அதில் வாழ்ந்த பல்வேறு உயிர்கள் இன்றைக்கு இல்லாமல் அழிந்து விட்டது. நாம் சாதாரணம் என்று பார்க்கும் தேனீக்களின் அழிவும் கூட நான்காண்டுகளில் உலகத்தில் மனிதர்களே இல்லாது செய்துவிடும் என்கின்ற அதிர்ச்சி தகவலை அறிய முடிகிறது. பூக்காத மரம் காய்க்காது, காய்க்காத மரம் கனியாது, கனியில்லையென்றால் விதை இல்லை, விதை இல்லை என்றால் மரம் இல்லை, அப்படி என்றால் மனிதர்கள் மட்டும் எப்படி வாழ முடியும்? சிந்திக்க வேண்டிய கேள்வி. சிந்திப்போமா?. இந்நூலை அனைவரும் வாங்கி படியுங்கள்.

**–சமரன்**

| | | |
|---|---|---|
| **நூலாசிரியர்** | : | **பாண்டிய மண்டல வேளாண் பேரமைப்பு** |
| **பக்கம்** | : | **134 விலை : 150** |
| **வெளியீடு** | : | **பென்னிகுயிக் பதிப்பகம், 41/ 14 11, செந்தில்நாதன் தெரு, தாசில்தார் நகர், மதுரை–20** |

# தன்னை முன்னிலைப்படுத்தாதவர் தோழர் டி.ஆர்.எஸ். மணி

*பாசத்திலும் கண்டிப்பிலும் ஒரு தந்தை!*
*அன்பிலும் நேசத்திலும் சிறந்த பண்பாளர்!*
*தடம் தெரியாதவர்களுக்கு சிறந்த வழிகாட்டி!*
*விவரம் தெரியாதவர்களுக்கு நல்லாசிரியர்*
*இவர்தான் டி ஆர் எஸ்..*

காஞ்சிபுரத்தை பூர்வீகமாகக் கொண்ட ராமமூர்த்தி ஐயர், ருக்மணி அம்மையாருக்கு 10/2/1937 இல் மகனாகப் பிறந்தவர் டி. ஆர். சுப்பிரமணியன் என்னும் டி. ஆர். எஸ். மணி. சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்தவர். தனது சித்தி சித்தப்பாவின் அரவணைப்பில் சென்னை வில்லிவாக்கத்தில் வளர்ந்தார். வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த சோமசுந்தரம் இவரது நெருங்கிய நண்பர். அவருடன் ஏற்பட்ட தோழமை கம்யூனிஸ்ட் கட்சி மீது டி. ஆர். எஸ் க்கு பற்று ஏற்பட்டது. வில்லிவாக்கம் ஊராட்சியில் துப்புரவு பணியாளர்களை ஒருங்கிணைத்து சங்கம் உருவாக்கினார்.



இவரது தொடர் செயல்பாட்டினால் 1970 ல் உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் அமைப்பாளராக இருந்து செயல்பட்டு வந்ததை அறிந்த அன்றைய ஏ. ஐ. டி. யு. சி. பொதுச் செயலாளர் ஏ. எம். கோபு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் டி. ஆர். எஸ். மணி தமிழ்நாடு ஏஐடியுசி மாநில தலைமையகத்தில் பொறுப்பேற்று செயல்பட தொடங்கினார். தனது இறுதி மூச்சு வரை ஏ. ஐ. டி. யு. சி. மாநில மையத்தில் சிறப்பாக செயல்பட்டார்.

ஏ. ஐ. டி. யு. சி. யின் மாநில பொருளாளர், மாநிலச் செயலாளர் பொறுப்புகளை ஏற்று ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற துணைவனாக செயல்பட்டு வந்த டி. ஆர். எஸ். துப்புரவு பணியாளர்களுக்கு பணி செய்வதை தனது பாக்கியமாக கருதினார், அவர்கள்தான் எனக்கு குரு எனப் போற்றினார்.

உள்ளாட்சி தொழிலாளர்களுக்கு மிக்ஷி கிரேடு அரசு அங்கீகாரம் பெற்றுத் தந்த தொழிற்சங்க தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்களுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியவர். 2002 தோழர் கே. டி. கே. மறைவுக்கு பின்னர் தமிழ்நாடு உள்ளாட்சி தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவராக செயல்பட்டார் டி. ஆர். எஸ்.

1991 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற அமைப்பு மாநாட்டில் தமிழ்நாடு ஏ ஐ டி யு சி கட்டடத் தொழிலாளர் சங்கம் மாநில சங்கமாக உருவாக்கப்பட்டது. கட்டுமான தொழிலாளர்களை அமைப்பாக்க தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அமைப்பை கட்டுவதற்கு உறுதுணையாக இருந்தவர் டி. ஆர். எஸ்.

தமிழ்நாடு அரசு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியம் உருவாக்கிய போது இயல்பாகவே தமிழ்நாடு ஏ ஐ டி யு சி யின் பிரதிநிதியாக பரிந்துரை செய்யப்பட்டு நல வாரிய உறுப்பினரானார். தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். கட்டுமான தொழிலாளர் நலவாரிய கூட்டங்களில் தொழிலாளர்கள் உரிமைக்கான தனது குரலை எதிரொலித்து பல உரிமைகளை பெற்று தந்தவர். வாரிய நிதியை தொழிலாளர் நலன்களுக்காக மட்டுமே செலவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் டி. ஆர். எஸ்.

2001 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் தலைமையில் தமிழ்நாடு அரசால் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப் பட்டது. அந்த விழாவில் டி. ஆர். எஸ். பங்கேற்று அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தனி நல நிதியம் உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி பேசினார். கலைஞர் பேசும்போது டி. ஆர். எஸ். முன்வைத்த கோரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்வதாக குறிப்பிட்டு பேசினார்.

தமிழ்நாடு ஏ ஐ டி யு சி அமைப்புச் சாராதொழிலாளர்கள் சம்மேளனத்தின் பொதுச்செயலாளராக டி ஆர் எஸ் மணி செயல்பட்டனர்.

தொழிற்சங்க கல்வியை முறையாக நடத்துவதில் முக்கிய பாத்திரம் வகித்தவர், மத்தியதொழிலாளர் கல்வி வாரியத்தின் சென்னை மண்டல வாரிய உறுப்பினராகவும் செயல்பட்டவர். பல கல்வி முகாம்களை நடத்தினர்.

மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டு போராட்டம், மாநில அளவிலான அனைத்து சங்க கூட்டு போராட்டங்களை ஒருங்கிணைத்தவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் செயல்பட்டவர்.

தொழிற்சங்கங்க பணிகளுக்கு அப்பாற்பட்டு மனித உரிமைகள், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, ஐ. எல். ஓ. அமைப்புடன் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட செயல்பாட்டிலும் அக்கரை செலுத்தியவர்.

திருமணம் ஆகாமலேயே தன் இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர். ஏ ஐ டி யு சி அலுவலகமே அவரது வீடு என்றாலும் தனது குடும்ப உறவுகளுடனும் தொடர்பில் இருந்து வந்தவர்.

2011 ஆம் ஆண்டுதீபாவளி அன்று அவரது உறவினர் வீட்டில் உணவு அருந்திவிட்டு குடும்பத்தாருடன் உற்சாகமாக பேசிக் கொண்டிருந்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணத்தை தழுவினார். டி. ஆர். எஸ். அவர்களின் மறைவு தொழிற்சங்க இயக்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

**தோழர் டி.ஆர்.எஸ். மணி நினைவு நாள் 26.10.2011**

**– இரா. துரைசாமி**

# மதுரை தோழர் கே. கந்தசாமி மறைவுக்கு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல்

மதுரை தோழர் கே. கே. மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த உறுப்பினரும், மதுரை மாவட்ட முன்னோடி தலைவர்களில் ஒருவருமான தோழர் கே. கந்தசாமி (90) சென்னை ஓமந்தூரார் அரசினர் மருத்துவமனையில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறோம்.

நாட்டின் விடுதலைப் போராட்ட காலத்தில் மதுரை நகரிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் கம்யூனிஸ்டு கட்சி நடத்திய இயக்கங்களால் ஈர்க்கப்பட்டவர்.

முதல் தலைமுறை தலைவர்கள், ப.ஜீவானந்தம், பி ராமமுர்த்தி, என் சங்கரய்யா, கே.டி.கே.தங்கமணி, ஜானகியம்மாள் போன்றோரின் வழி நின்று செயல்பட்டவர்.

கட்சியில் பிளவு ஏற்படுத்தி வெளியேறிய தோழர்கள் அமைத்த மார்க்சிஸ்ட் கட்சியில் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு திருப்பரங்குன்றம் வட்டக் குழு செயலாளர் பொறுப்பில் நீண்ட காலம் பணியாற்றி வந்தவர். தற்போது மதுரை நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள சு. வெங்கடேசன் உட்பட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கட்சி அமைப்பில் ஊழியர்களாக செயல்பட உருவாக்கியவர்.

தோழர் கே.கே. என்ற மக்களால் அழைக்கப்பட்ட தோழர் கே.கந்தசாமி 2006 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்தார். 2016 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் கட்சியின் வேட்பாளராக தேர்தலை சந்தித்தவர்.

கட்சி நடத்திய பல போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். சாதிய எண்ணங்களை அறவே வெறுத்து வாழ்ந்து காட்டியதுடன் தனது ஒரே மகள் பொன்னிக்கு சாதி மறுப்பு திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தவர். இவரது வாழ்க்கை இணையர் பேச்சியம்மா சில ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் செலுத்தி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து நிற்கும் அவரது மகள் பொன்னிக்கும் குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரி வித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.







16 ஆம் பக்க தொடர்ச்சி

அரசு ஒன்றை நிறுவும் பிற்போக்குத்தனமான சியோனிச திட்டத்துடன்; மிகச்சிறிய காசா நிலப்பகுதியை திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றி பாலஸ்தீனர்களை அடைத்து வைத்திருக்கும் இஸ்ரேல் இனவெறி அரசும் அதனை பாதுகாத்துக் கொண்டிருக்கும் மேற்கு நாடுகளும் தான் பொறுப்பு. ஆனால், பாலஸ்தீன மக்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் இஸ்ரேல் அரசு அதற்குப் பலியாகிறது என்றும் இஸ்ரேலும் அமெரிக்காவும் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

இது நடந்த நிகழ்வுகளை தலைகீழாக மாற்றிப் பேசுவதாகும். தங்களின் பரப்புரை பலத்தின் மூலம் இதனை சாதித்து விடலாம் என இஸ்ரேலும் மேற்கு நாடுகளும் நினைக்கின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனி நாடு என்ற பிரிட்டனின் திட்டத்திற்கு சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பு 1922 இல் ஒப்புதல் வழங்கியது. ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்களில் 90 ஆயிரம் பேர் பாலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உருவான ஐ.நா. சபை பாலஸ்தீனத்தை மூன்றாகப் பிரித்து அரபு நாடு, யூத நாடு, ஜெருசலம் தனி என 1947 நவம்பர் 29ல் அறிவித்தது. இதன்படி 70 விழுக்காடு உள்ள இஸ்லாமியர்களுக்கு பாலஸ்தீனத்தில் 43 விழுக்காடு இடமும்; 30 விழுக்காடு உள்ள யூதர்களுக்கு 56 விழுக்காடு இடமும் சொந்தம் என பிரிவினை செய்யப்பட்டது.

1948 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதி பாலஸ்தீனத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியது. அதுவரை பிரிட்டனின் கட்டுப்பாட்டில் பாலஸ்தீனம் இருந்தது. பிரிட்டன் வெளியேறியவுடன் இஸ்ரேல் என்ற தேசம் உருவாகிவிட்டதாக யூதர்கள் அறிவித்தனர்.

பாலஸ்தீன இஸ்லாமிய படுகொலைகள், ராணுவ ஆக்கிரமிப்புகள் என அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளால் அந்த நிலப் பகுதியே ரத்தமானது. பாலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை இஸ்ரேல் விழுங்கியது. தங்கள் மக்களை அழைத்துச் சென்று குடியேற்றினர். இதனால் பாலஸ்தீனத்தின் வரைபடம் கழுதை தேய்ந்து கட்டெறும்பு போல் ஆகி, காசா துண்டு நிலத்துக்குள் சுருங்கி விட்டது. இன்றைய இஸ்ரேலின் பரப்பளவு 21 ஆயிரம் சதுர கிலோ மீட்டர். பாலஸ்தீனத்தின் பகுதி வெறும் 6 ஆயிரம் சதுர கிலோ மீட்டர்.

அமெரிக்கா பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளால் ஆயுதமயமாக்கப்பட்ட இஸ்ரேலிய அரசு, முக்கால் நூற்றாண்டுகளாக பாலஸ்தீன மக்களின் அனைத்து எதிர்ப்புகளையும் மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கி வைத்துள்ளது.

ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்; இஸ்ரேல் போட்டுக் கொண்ட ஒப்பந்தங்கள்; பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் என எதையும் இஸ்ரேல் அரசு பின்பற்றியதில்லை. இவற்றுக்கு எதிராக ஐநா சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் தங்களுக்கு இருக்கும் ரத்து அதிகாரத்தை (வீட்டோ) பயன்படுத்தி அமெரிக்காவும் பிரிட்டனும் அந்த தீர்மானங்களை நிறைவேற விடாமல் செய்துவிடுகின்றன.

பாலஸ்தீன மக்கள் போராட்டங்களில் ஈடுபடும்போது அடக்குமுறை மூலமே இஸ்ரேல் பதிலளித்து வந்துள்ளது.

1948, 1949 மற்றும் 1967 போர்களின் போது விரட்டியடிக்கப்பட்ட பாலஸ்தீன மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கான உரிமை கோரி 201819ல், "வீடு திரும்புவதற்கான பெரும் அணிவகுப்பு" என்ற பதாகையின் கீழ் காசாவில் போராட்டங்களில் ஈடுபட்டனர். இஸ்ரேலிய ராணுவம், அவர்களை சுட்டுக்கொன்று அந்தப் போராட்டத்திற்கு பதிலளித்தது. இதில் 223 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 9,200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

2008 – 09 ல் காசா மீதான வான்வழி குண்டுவீச்சில், நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இஸ்ரேலிய உயிரிழப்புகளைவிட பாலஸ்தீனர்களின் உயிரிழப்புகள் 1:100 என்ற விகிதத்தில் அதிகமாக இருந்தது என்று மதிப்பிடுகின்றனர்.

மேற்குக்கரையில் உள்ள பாலஸ்தீன மக்கள் நூற்றுக்கணக்கான தனித்தனி கொட்டடிகளில், ராணுவ சோதனைச் சாவடிகளால் சூழப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். அதேநேரத்தில், பெரும் திறந்தவெளி சிறைச்சாலையாக காசா மாற்றப்பட்டுள்ளது: காசா பகுதியில் வாழும் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள், ஒவ்வொரு தேவைக்கும் இஸ்ரேலிய அரசின் தயவில் வசித்து வருகின்றனர்.

"காசா மீது ஒரு முழுமையான முற்றுகையை" இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலாண்ட் அறிவித்துள்ளார். "மின்சாரம் இருக்காது, உணவு, தண்ணீர் கிடைக்காது, எரிபொருள் இருக்காது, அனைத்தும் மூடப்படும். நாங்கள் மனித விலங்குகளுடன் போராடுகிறோம்" என்று கலாண்ட் கூறியுள்ளார்.

ஐ.நா.வுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதரும், குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளருமான நிக்கி ஹேலி, "இஸ்ரேலின் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அமெரிக்கா மீதான தாக்குதல்" என அறிவித்தார்.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு "அடுத்த சில நாட்களில் எதிரிகளுக்கு நாம் செய்யப்போவது தலைமுறை தலைமுறையாக எதிரொலிக்கும்" என்று அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

காசா மட்டுமல்ல, உலகின் எந்த பகுதியிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புகள் எழும் போதெல்லாம் ஆதிக்க சக்திகள் இப்படித்தான் அச்சுறுத்தியும் எச்சரிக்கை விடுத்தும் வருகின்றன.

"அடக்குமுறையாளர்களான நாங்கள், எமது நலன்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் எந்தத் தடையும் இன்றி ஆயுத பலத்தை பயன்படுத்தி இருக்கிறோம். வெடிகுண்டுகளை வைக்கலாம். முற்றுகையிட்டுப் பட்டினி போடலாம். சிறையில் அடைக்கலாம். கழுத்தை காலால் நெரிக்கலாம். படை என்பது எங்களின் ஏகபோகம். ஒடுக்கப்பட்ட மக்களான நீங்கள், எந்த சூழ்நிலையிலும் பதிலுக்கு பலத்தை பயன்படுத்தக் கூடாது" என்பதுதான் ஒடுக்குமுறையாளர்களின் அடிப்படை வர்க்க அணுகுமுறை. இவற்றை யார் மீறினாலும், அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தும் பரப்புரை கட்டவிழ்த்து விடப்படும்.

இப்படித்தான் ஈராக் மீது படையெடுத்த போது அமெரிக்கா கூறியது. வியட்நாம் மீது படையெடுத்த போதும் கூறியது. ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த போதும் கூறியது. அவர்களின் மொழி என்றைக்கும் மாறாது. அதேநேரத்தில், இஸ்ரேல் ராணுவத் தாக்குதலாலும்; உணவு, தண்ணீர் கிடைக்காமலும் பாலஸ்தீன மக்கள் செத்து மடியும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதைக் கண்டித்து பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா உட்பட உலக நாடுகளில் மக்களின் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

காசா மீதான இஸ்ரேலின் கொலைகாரப் போருக்கு எதிராகவும், இஸ்ரேலுக்கு துணைநிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராகவும், பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகவும் பரப்புரைகளையும் போராட்டங்களையும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டிய நேரம் இது. இதனை உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளும் கம்யூனிஸ்ட்டுகளும் மேற்கொள்ள வேண்டும். இது அவசரமும் அவசியமும்கூட.

தொடர்புக்கு: 9500001224








இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர்
சுதந்திரப் போராட்டத் தியாகி
ஜனசக்தி **வி.இராதாகிருஷ்ணன்** அவர்களுக்கு
புகழஞ்சலி கூட்டம் மற்றும்
கவிஞர் **கே.ஜீவபாரதி** எழுதி
பாவை பப்பளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ள
**தியாக யாத்திரை** நூல் வெளியீட்டு விழா

இடம்: நியூசெஞ்சுரி காலனி, சென்னை – 58
நாள்: 22.10.2023 ஞாயிறு காலை 9.30 மணி

தலைமை
தோழர் **இரா.விஜயகுமார்**
அம்பத்தூர் பகுதி செயலாளர், சிபிஐ

வரவேற்புரை
தோழர் **இரா.துரைசாமி**
மாநில செயாலாளர் ஏஐடியுசி, க.தொ. சங்கம்

பங்கேற்போர்

தோழர் **மு.வீரபாண்டியன்**
மாநில துணை செயலாளர், சிபிஐ
திருமிகு **ஜோசப் சாமுவேல்** MLA
அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர், திமுக
கவிஞர் **கே.ஜீவபாரதி**
**பா.கருணாநிதி**
மாவட்ட செயலாளர்,சிபிஐ

தோழர் **டி.எம்.மூர்த்தி**
ஆசிரியர், ஜனசக்தி
திருமிகு **பி.கே.மூர்த்தி**
அம்பத்தூர் 7வது மண்டலக் குழு தலைவர்
**ஏ.எஸ்.கண்ணன்** EX.MLA
மாநில துணைத் தலைவர், ஏஐடியுசி

**ஏ.ஜி.சிதம்பரம்** (காங்கிரஸ்), USSR **நடராசன், சு.லெனின் சுந்தர்** CITU, **ஏ.எஸ்.குமார்** LTUC, **எம்.வி.ஜெகநாதன், ப.மாரியப்பன், அ.பத்மனாபன், சுப.தென்பாண்டியன், எம்.கமல்** எம்.சி 86வது வார்டு, வழக்கறிஞர் **ராஜேஷ், சண்முகநாதன்** NCBH, **ஆ.சிவகுமார்**

அன்புடன்

தோழர் **வி.ராதாகிருஷ்ணன் - மோட்சமேரி** குடும்பத்தார்

மகள்கள்:
திருமதி **கீதா இராமலிங்கம்**
டாக்டர் **ஆர்.சாந்தி மனோகர்**
திருமதி **பாரதி மனோஜ்**

மருமகன்கள்:
திரு **இராமலிங்கம்**
டாக்டர். **எம்.மனோகர்**
திரு **மனோஜ்குமார் சத்பதி**

பேரப்பிள்ளைகள்:
**பாலாஜி - துளசிபாலாஜி**, டாக்டர் **எம்.சுவாதி, அபிஷேக், அங்கிதா**

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 21.10.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இஸ்ரேல் அடாவடி முற்றுகையில் காசா!



## திறந்தவெளி சிறையில் பாலஸ்தீன மக்கள்

- வ.மணிமாறன்

**காசா முனை... துண்டு நிலம்... மத்திய தரைக்கடல், இஸ்ரேல், எகிப்து நாடுகளால் சூழப்பட்டுள்ளது. 41 கிலோ மீட்டர் நீளமும், 10 கிலோமீட்டர் அகலமும் கொண்டது. இதற்குள் 22 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். காசா நிலமெங்கும் ரத்தமும் கண்ணீரும் மரண ஓலமுமாக காட்சியளிக்கிறது.**

இஸ்ரேலின் குண்டு மழை எப்பொழுது பொழியும் என்பது யாருக்கும் தெரியாது. கட்டடங்கள், வீடுகள் எல்லாம் கண் முன் நொறுங்கி, இடிபாடுகளாக குவிந்து கிடக்கின்றன. காசாவின் அனைத்து வழிகளையும் இஸ்ரேல் மூடிவிட்டது. மின்சாரம் கிடையாது. உணவு, குடிநீர் எப்போது கிடைக்கும்? எப்போது உண்போம்? என்பது யாருக்கும் தெரியாது. ரொட்டி துண்டுகளை வாங்குவதற்கும் மணி கணக்கில் நீண்ட தொலைவு காத்திருக்க வேண்டும். இதுவரை பாலஸ்தீனர்கள் 2800 பேர் உயிரிழந்துள்ளனர் பல்லாயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மின் உற்பத்தி நிறுத்தப்பட்டதால், மின் வினியோகம் தடுக்கப்பட்டதால் ஜெனரேட்டர்களை நம்பியே மருத்துவமனைகள் இயங்குகின்றன. அவற்றுக்கான எரிபொருள் எந்நேரமும் தீர்ந்து விடலாம். மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு. இதனால் அனைத்து மருத்துவமனைகளும் முடங்கும் நிலையில் உள்ளன. இஸ்ரேல் குண்டு வீச்சால் படுகாயமடைந்த பாலஸ்தீனர்கள் சிகிச்சை பெறக்கூட வழியின்றி, செத்து மடிய நேரிடலாம்.

சின்ன நிலப்பகுதிக்குள் பாலஸ்தீனர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் யாரும் சாகலாம்; இருப்பவர்களை கண்டுகொள்வோம் என்பதுதான் அவர்களின் நிலை...

கவிஞர் மகமூத் தர்வீஷின் பின்வரும் கவிதை இந்த நிலையை படம்பிடிக்கிறது...

“எங்கள் இழப்புகள்: தினமும்
இரண்டிலிருந்து எட்டு தியாகிகள்.







பத்து பேர் காயமடைகிறார்கள்.
மேலும் இருபது வீடுகள்
மேலும் ஐம்பது தேவதாரு மரங்கள்
இதனுடன் சேர்ந்து
இந்தக் கவிதையும் நாடகமும்,
முடிக்கப்படாத ஓவியமும்
சந்திக்கும் கட்டமைப்பு பிழை..”

காசாவை இஸ்ரேலின் முப்படைகளும் முற்றுகையிட்டுள்ளன. இஸ்ரேலின் வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டன. எகிப்தை ஒட்டிய ஒரே ஒரு வழி அதுவும் எப்பொழுது திறக்கும் என்பது தெரியாது. எந்த நாடு தங்களை அரவணைக்கும் என்பதும் தெரியாது. பல்வேறு நாடுகள் அனுப்பிய மனிதாபிமான உதவிகளும் எல்லையிலேயே காத்திருக்கின்றன. அவை அனுமதிக்கப்படுமா? அல்லது அழிக்கப்படுமா? என்பது இஸ்ரேலுக்கு மட்டுமே தெரியும்.

காசாவை ஆளும் ஹமாஸ் படையினர், இஸ்ரேலுக்குள் புகுந்து அக்டோபர் 7ஆம் தேதி தாக்குதல் நடத்தினர். இரும்புக் கோட்டை என இறுமாந்திருந்த இஸ்ரேலுக்கு பெரும் அதிர்ச்சி. உலகக் கில்லாடி என பெயர் எடுத்திருந்த மொசாத் உளவு அமைப்பு திகைத்தது. ஹமாஸ் பயங்கரவாதம் என இஸ்ரேலும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கு நாடுகளும் அலறுகின்றன.

உள்நாட்டில் மக்கள் கிளர்ச்சியால் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த பிரதமர் நெதன்யாகு, பயங்கரவாத ஹமாஸை படுகுழியில் தள்ளியே தீருவோம் என சபதம் எடுக்கிறார்.

ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலிய குடிமக்களில் குறிப்பிடத்தக்க உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அவர்களில் பலர் பாலஸ்தீன மக்கள் மீதான அடக்குமுறைக்கு தனிப்பட்ட பொறுப்பாளிகள் அல்ல. இருப்பினும் இங்கு நாம் எழுப்ப வேண்டிய கேள்வி அவர்களின் மரணத்திற்கு யார் இறுதிப் பொறுப்பு? இந்த மனிதத் துயர்களுக்கு, சோகங்களுக்கு யார் பொறுப்பேற்பது?

இஸ்ரேலிய இனவெறி அரசும் அதற்கு ஆதரவாக இருந்து வரும் அமெரிக்காவும்தான் முதல் பொறுப்பு. பாலஸ்தீனர்களை, அவர்களின் மண்ணிலிருந்து வெளியேற்றிவிட்டு யூத

தொடர்ச்சி 15ஆம் பக்கம்







Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.